# உதயன்

சுடர் : 36 | கதிர் : 228 | திங்கட்கிழமை | ஆனி 28 ஆம் நாள் 12 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## நீச்சல் பழகிய மூவர் நீரில் மூழ்கி இறப்பு!

### ஒரே குடும்பத்தில் சோகம்

கொழும்பு, ஜூலை 12
நீச்சல் பழகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந் தச் சம்பவம் கொஸ 19

### வீட்டுத்திட்ட விவகாரம்

# மேன்முறையீட்டுக்கு கால எல்லை நீடிப்பு!

## 16 வரை முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு தொடர்பான மேன்முறையீட்டுக்கான கால எல்லை நீடிக் கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி வரை பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 19



## 18 பெண்கள் உட்பட மேலும் 35 பேர் காவு

கொழும்பு, ஜூலை 12
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 35 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள் 19

## சித்தங்கேணியில் வாள்வெட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
சித்தங்கேணி சிவன் ஆலய முன்றலில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் காயமடைந் துள்ளார். இது தொடர் பாக மேலும் தெரியவரு 19

## 672 கிலோ மஞ்சளுடன் பெரியகடை நபர் கைது

கொழும்பு, ஜூலை 12
சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 4 மில்லியன் ரூபா பெறுமதியான 672 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் மன்னார் பெரிய கடை கரையோர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரா 19

## ராஜபக்சக்களுடன் மோத ஓரணியில் திரளுங்கள்!

### சகல தரப்புக்கும் ரணில் அழைப்பு

கொழும்பு, ஜூலை 12
'நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாகியுள்ள ராஜபக்ச அரசுடன் மோதும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரம் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தியினர் மற்றும் ஏனைய தரப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப் போராட வேண்டும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 19

## பொலிஸ், சுகாதாரம், கல்வி அமைச்சுகள் கைமாறுகின்றன

### விமல், கம்மன்பிலவுக்கும் 'வெட்டு' விரைவில் முழுமையான சீரமைப்பு

கொழும்பு, ஜூலை 12
பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் அமைச்சரவை விரைவில் முழுமையாக மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும் இதன்போது சுகாதாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட அமைச்சுப் பதவிகள் கைமாறவுள்ளன எனவும் தெரியவருகின்றது. அத்துடன், அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் வகிக்கும் அமைச்சுகளின் கீழுள்ள விடயதானங்களும் மாற்றியமைக்கப்படவுள்ளன எனவும் அரச உயர்மட்ட வட்டாரங்களை மேற் 19

## உ/த, புலமைப்பரிசில் திகதிகளில் மாற்றம்

### கல்வி அமைச்சு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 12
2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்காக முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் மாற்றம் 19

## கொரோனா கட்டுப்பாட்டு சட்டத்தால் மக்களின் உரிமை மீறப்படக்கூடாது

### ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 12
'இலங்கையில் அமைதி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் பொது மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமை கொரோனாக் கட்டுப்பாட்டுச் 19



## குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்துக்கு மீண்டும் நீதிபதியானார் அன்னலிங்கம் பிரேமசங்கர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மீண்டும் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக 19

## அரசினது சர்வாதிகாரத்துக்கு நாம் முடிவுகட்டியே தீருவோம்

### எல்லே குணவங்ஸ தேரர் சூளுரை

கொழும்பு, ஜூலை 12
'அரசின் சர்வாதிகாரப்போக்குத் தொடர்ந்தால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள்கூடப் பறிபோகும் நிலை ஏற்படும். இதற்கு ஒருபோதும் இடம 19

### தென்மராட்சி


## பிரதேசசபை உறுப்பினர் சடலமாக மீட்கப்பட்டார்!



யாழ்ப்பாணம், ஜூலை 12
தென்மராட்சி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப் பட்டுள்ளார். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிகா’ வைரஸ் ஆபத்து இலங்கைக்கு எச்சரிக்கை



**கொழும்பு, ஜுலை 12**
**‘சிகா’ வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவிலிருந்து வருபவர்கள் தொடர்பில் இறுக்கமான கண்காணிப்பு தேவை. அவர்கள் ஊடாக இலங்கையில் இது பரவுவதற்கான ஆபத்துக்கள் காணப்படுகின்றன.**

இவ்வாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தைநல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியாவின் கேரள மாநிலத்தில் ‘சிகா’ வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள 14 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து இந்தியா முழுவதும் இந்த வைரஸ் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது ஏடிஸ் என்னும் நுளம்புக் கடியால் பரவுகின்றது. வெப்பமண்டல நாடுகளில் அதிகமாகக் காணப்படும் இந்த நுளம்பு பகல் வேளைகளிலேயே மனிதர்களுக்கு கடிக்கின்றது. அதிஷ்டவசமாக இலங்கையில் இந்த நுளம்பு கண்டறியப்படவில்லை.
இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொதுவாக லேசான காய்ச்சல், சொறி, தசை மற்றும் மூட்டு வலி, உடல்நலக்குறைவு அல்லது தலைவலி. போன்ற அறிகுறிகள் 2 தொடக்கம் 7 நாள்கள் வரை நீடிக்கும்- என்றார்.
(ஒ,5,இ)



# இலங்கையில் டிஜிட்டல் தடுப்பூசி அட்டை அறிமுகம்

*ஒலிம்பிக் குழுவுக்கு கையளிக்கப்பட்டது முதலாவது அடையாள அட்டை*

கொழும்பு, ஜுலை 12
கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஸ்மார்ட் டிஜிட்டல் தடுப்பூசி அட்டை இலங்கையில் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் நாமல் ராஜபக்ச கலந்து கொண்டு ஸ்மார்ட் டிஜிட்டல் தடுப்பூசி சான்றிதழை வழங்கினார்.
அதன் ஆரம்பமாக இந்த மாதம் ஜப்பான் டோக்கியோவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றவிருக்கும் இலங்கை அணி சார்பாக இலங்கை ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கத்தின் செயலாளர் கபிலா ஜீவந்தாவுக்கு முதலாவது ஸ்மார்ட் டிஜிட்டல் தடுப்பூசி வழங்கப்பட்டது.
அரச டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப நிறுவனமும் (ஐ.சி.டி.ஏ) சுகாதார அமைச்சும் கூட்டாகத் தயாரித்த இந்த சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசி டிஜிட்டல் அட்டைக்கான விண்ணப்பப் படிவத்தை விரைவில் சுகாதார அமைச்சின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தடுப்பூசி டிஜிட்டல் அட்டையில் பெயர், வயது, அடையாள அட்டை எண், தடுப்பூசி ஏற்றிக் கொண்ட திகதி, தடுப்பூசி வகை மற்றும் தடுப்பூசியின் தொகுதி எண் ஆகியவை உள்ளடக்கப்பட்டிருக்கும்.
தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் இலங்கை அரசால் வழங்கப்படுகின்ற கொரோனாத் தடுப்பூசி டிஜிட்டல் அட்டையில் காணப்படும் தனித்துவமானது க்யூஆர் குறியீட்டின் மூலம் அது தொடர்பான விவரங்களைத் துல்லியமாகச் சரிபார்த்துக் கொள்ளலாம்.
(ஒ,சி)

## பாகிஸ்தான் தூதுவர் கொலை முயற்சி
# ஆதித்தியனுக்கு எதிரான வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படுகிறது

கொழும்பு, ஜுலை 12
பாகிஸ்தான் தூதுவரைக் கொல்ல முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 12 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கனகரத்தினம் ஆதித்தியனுக்கு எதிரான வழக்கை துரிதப்படுத்துவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகனான ஆதித்தியனுக்கு எதிராக சட்டமா அதிபரால் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் 19ஆம், 22ஆம், 26ஆம், 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானித்து அரச சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பதிவாளருக்கு கட்டளையிட்டுள்ளார்.
இந்த வழக்கு விசாரணையின்போது ஆதித்தியன் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, 12 ஆண்டுகளாக மகர சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கைதியான ஆதித்தனுக்கு எதிராக ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ச, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக தாக்கல் செய்யட்ட வழக்கில் எனது வாதத்தையடுத்து 2018ஆம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். மற்றைய வழக்கான, பாகிஸ்தான் தூதுவர் கொலை முயற்சி வழக்கு இந்த நீதிமன்றில் 2019ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
கனகரத்தினம் ஆதித்தியனுக்கு எதிராக முக்கிய சான்றாக இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இந்த நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட நிலையில் சட்டமா அதிபர் 65 சாட்சியாளர்களை அரச சாட்சியாக பட்டியலிட்டு சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பும்படி இந்த நீதிமன்றில் வேண்டுகோளை முன்வைத்துள்ளார் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்ட பின்னர் 2019ஆம் ஆண்டிலிருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் இந்த வழக்கின் மேலதிக விசாரணைக்கு பல தவணை வழங்கப்பட்டதெனினும் சாட்சிகள் நீதிமன்றில் சமூகமளிக்காமையாலும் கடந்த வருடத்திலிருந்து கொரோனாத் தொற்றுக் காரணமாகவும்; இரண்டு வருடங்கள் கடந்து விட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் 12 வருடங்களாக பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் கீழ் தடுப்பு முகாமில் தடுத்து வைக்காப்பட்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கைதி கனகரத்தினம் ஆதித்தியன் மாத்திரமே, என்று சமர்ப்பணத்தை முன்வைத்தார்.
இந்த வழக்கை விசாரணைக்காக திகதியிடும்படி வேண்டிக்கொண்டதையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி அரச சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப பதிவாளருக்கு கட்டளையிட்டு மேலதிக விசாரணைகளை தொடர்ந்து நடத்த பணித்தார்.
(ஒ,5)


# அராலியில் விபத்து ஒருவருக்கு காயம்!

யாழ்ப்பாணம், ஜுலை 12
அராலி மத்தியில் நேற்று இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மத்தி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
எதிர் எதிராக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதாலேயே குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ம-27)

# வேலைவாய்ப்பு என்றுகூறி மோசடிசெய்த பெண் கைது

ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து, நாட்டின் பல பிரதேசங்களிலுமுள்ள இளைஞர்களிடம் பல கோடி ரூபா நிதி மோசடிசெய்த, பெண்ணொருவர், கடுவலை கொரதொட்ட பிரதேசத்தில் வைத்து, நவகமுவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பெண், தெஹியோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதானவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நவகமுவ பிரதேசத்தில் இரு இளைஞர்களிடம், [illegible] ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார் என்ற முறைப்பாட்டுக்கமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்த பெண், ஜப்பானில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து, பலரிடம் நிதி மோசடி செய்துள்ளமை தொடர்பில், இவருக்கு எதிராக 32 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சில வழக்கு நடவடிக்கைகளில், இவர் நீதிமன்றை தவிர்த்துவந்த நிலையில், இவரை கைது செய்வதற்காக 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 21ஆம் திகதி ஹஜ் பெருநாள்

கொழும்பு,ஜூலை 12
இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் புனித ஹஜ் பெருநாளை எதிர்வரும் 21 ஆம் திகதி அனுஷ்டிப்பார்கள் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. புனித துல் ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்படாமை காரணமாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஒ.4)

# எரிபொருள் விலைக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## பஸில் நம்பிக்கை



**கொழும்பு,ஜூலை 12**
**சகல பொருளாதார காரணிகளையும் கருத்தில் கொண்டு எரிபொருள்களின் விலை தொடர்பில் முன்னேற்றமான தீர்மானம் எடுக்கப்படும் என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.**

நிதியமைச்சராக பதவியேற்றதன் பின்னர், பெல்லன்வில ரஜமஹா விகாரையில் மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொது மக்களின் நலன்கருதி எரிபொருள் விலையைக் குறைப்பது உள்ளிட்ட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அரசால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமாயின், அவை நிவர்த்தி செய்யப்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.
சகல பொருளாதார காரணிகளையும் கருத்தில் கொண்டு எரிபொருள் விலை குறித்து ஜனாதிபதி சிறந்த தீர்வை வழங்குவார் என எதிர்பார்க்கிறோம். நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன் பொருளாதார ரீதியில் பல கடுமையான தீர்மானங்களையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. பொருளாதாரத்தை மேம்படுத்த உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை தற்போது பகிரங்கப்படுத்த முடியாது.
எமது திட்டங்கள் செயற்பாட்டு ரீதியில் வெளிப்படும். ஆகவே பொருளாதாரத்தையும் எம்மால் மேம்படுத்த முடியும்- என்றார். (ஒ.4)

# சீனாவிலிருந்து 2 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு

கொழும்பு.ஜூலை 12
சீனாவிடம் கொள்வனவுசெய்யப்பட்ட மேலும் 2 மில்லியன் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தன.
இலங்கைக்குத் தேவையான தடுப்பூசிகளை எடுத்து வருவதற்காக இலங்கையிலிருந்து இரண்டு விமானங்கள் சீனாவுக்குப் பயணித்திருந்தன.
இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் விமானங்கள் இரண்டு, சீனாவுக்கு அனுப்பப்பட்டன.
இரண்டு விமானங்கள் ஊடாகவும் சுமார் 2 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இலங்கைக்கு ஒரே தடவையில் அதிகளவிலான தடுப்பூசிகளை கொண்டுவரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# தாதியர்கள், மருத்துவர்களுக்கு ஓய்வூதிய வயது 63 ஆக உயர்வு

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,ஜூலை 12
தாதியர்கள் மற்றும் பல் மருத்துவர்களின் ஓய்வூதிய வயதை 63 ஆக உயர்த்தும் வர்த்தமானி அறிவிப்பு கடந்த 8ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அதற்கான வர்த்தமானி அறிப்பை வெளியிட்டுள்ளார். அதற்கமைவாக பல் மருத்துவ நிபுணர்களுக்கான ஓய்வூதிய வயது ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதலும், தாதியர்களுக்கான ஓய்வூதிய வயது ஜூன் மாதம் 14 ஆம் திகதி முதலும் நடைமுறைக்கு வரும்.
முன்னதாக, பொதுச்சேவையில் உள்ள அனைத்துத் தரங்களின் மருத்துவ அதிகாரிகளின் ஓய்வூதிய வயது 63 ஆக அதிகரிக்கப்பட்டு அதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# சீரற்ற வானிலை: ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு.ஜூலை 12
நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
6 மாவட்டங்களைச் சேர்ந்த 24 பிரதேச செயலக பிரிவுகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ.4)

# கடைசிவரை மகனைக் காணாது மற்றுமொரு தந்தையும் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 12
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பில் உறுப்பினராக இணைந்து தனது மகனைத் தேடி வந்த மற்றுமொரு தந்தையும் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.



கிளிநொச்சி பரந்தன் 11ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி இராசரத்தினம் என்பவரே சுகயீனம் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.
மகனான இராசரத்தினம் கேதீஸ்வரன் கடந்த 1995ஆம் ஆண்டு சிங்கள இராணுவத்தாலும், அதன் துணை இராணுவக் குழுக்களாலும் யாழில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். அவரைத் தேடி போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில மகனைக் காணாது அவர் உயிரிழந்துள்ளார். (ப-6)

# ஆட்சியும் இல்லை அரசிலும் இல்லை!

## சுதந்திரக் கட்சியின் பரிதாபநிலை குறித்து தயாசிறி கடும் கவலை

கொழும்பு, ஜூலை 12
"அரசியல் களத்தில் எவராலும் என்னை மௌனிக்கச்செய்ய முடியாது." என்று தெரிவித்து, மொட்டுக் கட்சி உறுப்பினர்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர.
மொட்டுக்கட்சி உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கும்வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவின் வெற்றியில் சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் உள்ளது. இதனை புரிந்து கொள்ளாமல், நன்றி மறந்து விமர்சிக்கின்றனர்.
சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாதிருந்திருந்தால் கண்டி மாவட்டத்தில்கூட 50 ஆயிரம் வாக்குகளால் தோல்வியை சந்திக்க நேரிட்டிருக்கும் என்பதை திலும் அமுனுகம போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியும் செய்கின்றது. அரசியலும் செய்கின்றது. ஆனால் சுதந்திரக்கட்சிக்கு இந்த இரண்டுமே இல்லாமல்போயுள்ளது. எனவே, என்னை எவரும் மௌனிக்க வைக்கமுடியாது. நான் தான் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளேன்." -என்றார். (து-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனநாயக நாடா? பெரும் சந்தேகம் எழுந்துள்ளது

## கூறுகின்றது தமிழர் ஆசிரியர் சங்கம்

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**தற்போதைய அரசு ஆட்சியில் இல்லாத காலங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தியது. ஆனால் தற்போது அரசுக்கு எதிரான ஜனநாயக ரீதியிலான வன்முறையற்ற போராட்டங்களை ஏற்றுக்கொள்ளாமை அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றமை ஜனநாயக நாடு என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.**

இது பற்றி சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

நாட்டு மக்களதும் கல்விக்கொள்கைகளதும் எதிர்கால நலன்களை கருத்திற்கொள்ளாது தான்தோன்றித்தனமாக சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த நினைப்பது ஜனநாயக விரோத செயற்பாடாகும்.

கல்வியில் விகிதாசாரமுறை கொண்டுவந்ததால் நாட்டில் ஏற்பட்ட அழிவுகள் பல வருட காலங்கள் நீண்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அத்தகைய முறை இனரீதியிலான செயற்பாடு என்பதை அனைவரும் அறிந்திருந்தும் அதனை உணர்ந்தவர்களாக நடக்கவில்லை. தற்போது ஏற்படுத்தப்படவுள்ள சட்டவரைவுகள் ஒட்டுமொத்த நாட்டின் கல்விக் கொள்கைகளை கேள்விக்குறியாக்கியுள்ளன. இதனை ஒரு சமூகமன்றி பல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காகவே ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களினதும் சமூகங்களதும் கருத்துக்களுக்கு எந்தவித மதிப்பும் அளிக்காத அரசுதான் தற்போது ஆட்சியில் உள்ளது.

மாணவர்கள் இழந்துபோன கல்வியை மீட்டெடுக்க அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்கின்ற பணிகளைக்கூட இந்த அரசு மதிப்பதாக இல்லை- என்றுள்ளது. (த-இ)

# ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை தனிமைப்படுத்துவதை ஏற்க முடியாது

## சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 12

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை, தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்து தனிமைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு சட்டத்தரணிகள் சங்கத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் 19 தொற்று என சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தனிமைப்படுத்தல் சட்டம் பொருந்தும்.

எனவே, தனிமைப்படுத்தல் ஒரு சுகாதார நடவடிக்கை. அதனை தண்டனை அல்லது தடுப்புக்காவல் உத்தரவாக பயன்படுத்தப்படக்கூடாது.

அவர்களை எங்கு கொண்டுசெல்கின்றோம் என்பதை அவர்களின் குடும்பத்தினருக்குக் கூட அறிவிக்காமல் கொண்டு சென்றுள்ளனர். இந்த நடவடிக்கைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் போன்ற சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தலின் பேரில் எடுக்கப்பட்டவை என்பதற்கான சிறிய ஆதாரமும் இல்லை- என்றுள்ளது. (ஓ.4)

# உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்கள் முல்லை. நகருக்குள் செல்ல வேண்டும்

## கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் வலியுறுத்து


முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு நகருக்குள் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் வருகை தருவது அவசியமானது என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்ற பிரச்சினைக்குத் தீர்வுகள் காணப்படாமல் உள்ளன. முல்லைத்தீவு பஸ் நிலையம் தற்போது மாவட்டச் செயலகத்துக்கு அருகில் உள்ளது. இந்தப் பஸ் நிலையத்தில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் உள்ள முல்லைத்தீவின் நகரத்தின் பழைய பஸ் நிலையம் மற்றும் பொதுச்சந்தை ஆகியவை அமைந்துள்ளன. உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் முல்லைத்தீவு நகருக்குள் சென்று திரும்ப வேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. மாவட்டச் செயலாளரிடமும் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்படும்போது 15 நாள்களுக்கு முல்லைத்தீவு நகருக்குள் பஸ்கள் வந்து செல்லும். பின்பு அவை இடைநிறுத்தப்பட்டு விடும். புதிய பஸ் நிலையத்தில் இருந்து முல்லைத்தீவு நகரின் சந்தைக்கு மக்கள் நடந்து செல்ல வேண்டும். உள்ளூர் பஸ்கள் முல்லைத்தீவு நகருக்குள் சென்று திரும்புவதன் மூலம் மாவட்டத்தின் மக்கள் பெரும் நன்மையடைவர்.

உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு எடுத்துச்செல்வது இலகுவானது. புதிய பஸ் நிலையத்துடன் பஸ் சேவைகள் நிறைவு பெறுவதன் காரணமாக முச்சக்கரவண்டிகளைப் பயன்படுத்தித்தான் தமது பொருள்களை முல்லைத்தீவு பொதுச்சந்தைக்குக் கொண்டுசெல்ல வேண்டி உள்ளது. ஏனைய மாவட்டங்களில் இந்த நிலைமை காணப்படுவதில்லை. முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களை முல்லைத்தீவு நகருக்குள் சென்று திரும்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவை நிரந்தர நடவடிக்கையாகவும் அமைய வேண்டும் என்றார். (ப13)



# முன்னணியால் உதவிப்பொருள்கள்

முல்லைத்தீவு, ஜூலை 12

ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்டு கேப்பாப்பிலவு விமானப் படை இடைத்தங்கல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 33 பேர் கைதுசெய்யப்பட்டு, அவர்களில் 16 பேர் கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் பௌத்த துறவிகள் உள்ளிட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மாற்று உடைகள், காலணிகள் அற்ற நிலையில் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதால், அவர்களுக்கான உடு புடவைகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழங்கப்பட்டன. (ப-19)

# ஜோசப் ஸ்டாலினின் கைது ஜனநாயகப் படுகொலையே

## சட்டத்தரணி சுகாஷ் சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது ஒரு ஜனநாயகப் படுகொலை என்பதோடு இலங்கை இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் ஜனநாயகப் படுகொலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புக் கல்லூரி சட்டவரைபுக்கு எதிராக ஜனநாயக வழியிலே அகிம்சை முறையிலே எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் மரியாதைக்குரிய ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டு, முறையற்ற விதத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.


இலங்கை நாடாளுமன்றத்தில் இருக்கின்ற சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்டவரைபு என்பது இலங்கையை சட்டரீதியாக இராணுவ மயப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு வழிவகுக்கின்ற ஒரு சட்டவரைபு. இந்த சட்டவரைபை ஜனநாயக வழியிலே எதிர்த்த இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் ஒரு சட்டவரைபுக்கு ஜனநாயக வழியிலே சுகாதார விதி முறைகளைப் பின்பற்றி எதிர்ப்பு தெரிவித்தமைக்காகக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்திலேயே உட்படுத்தப்பட்டு தற்சமயம் கேப்பாபுலவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறி கைதுசெய்து அடைக்கப்பட்டிருக்கிறார். உண்மையில் இது ஒரு கடத்தல் பாணியிலே தான் அவருடைய தனிமைப்படுத்தல் அமைந்திருக்கிறது என்பது கசப்பான உண்மை- என்றார். (ப-26)

# நல்லிணக்க மன்றத்தின் ஒன்றுகூடல்

அம்பாறை, ஜூலை 12


சமாதானமும் சமூகப்பணி நிறுவன அனுசரணையுடனும் இயங்கிவரும் கல்முனை பிரதேச நல்லிணக்க மன்றத்தின் விசேட ஒன்றுகூடல் அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்றத்தின் இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் அஸீஸ் தலைமையில் கல்முனையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அமைப்பின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக கொரோனா விழிப்புணர்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்திட்டங்கள் மேற்கொள்ளவுள்ளன என்று சமாதானமும் சமூகப்பணி அமைப்பின் இணைப்பாளர் ரீ. ராஜேந்திரன் தெரிவித்தார். (ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் தொழிலாளர்கள் 124 பேர் கொரோனாவால் காவு



கொழும்பு, ஜூலை 12

16 நாடுகளில் தொழில் புரியும், இலங்கையர் 124 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக உயிரிழந்தவர்களின் இறப்புச் சடங்குகளுக்காக தலா 40 ஆயிரம் ரூபாவும், நஷ்டஈடாக தலா 5 லட்சம் ரூபாவும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதேவேளை, வெளிநாடுகளில் தொழில்புரியும் 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதனிடையே, வெளிநாடுகளில் தொழில்புரியும் 27 ஆயிரம் இலங்கையர்கள் நாடு திரும்ப எதிர்பார்த்துள்ளனர் - என்றார். (ஒ.4)

# ஆட்டத்தை மீண்டும் ஆரம்பித்தது கொரோனா

## ஒரே நாளில் 5 லட்சம் பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஜூலை 12

உலக அளவில் கொரோனாத் தொற்று அபாயம் இன்னமும் குறையவில்லை. ஒரு நாளில் மட்டும் புதிதாக 5 லட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சிரேஸ்ட விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவிக்கையில்,

உலகளவில் கொரோனாத் தொற்று பாதிப்பு ஏற்பட்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்டாலும் கூட, தொற்றின் வீரியம் குறைந்தபாடில்லை. கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து பல அலைகளாக தாக்கத் தொடங்கியுள்ளது. இதனால், உலக நாடுகள் விழி பிதுங்கி நிற்கின்றன.

ஒரே நாளில் புதிதாக 5 லட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. 9 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்று வேகமாக பரவிவருவதற்கு டெல்டா வகையைச் சேர்ந்த வைரஸே காரணம். வைரஸ் பரவலைத் தடுக்கக்கூடியது தடுப்பூசி மட்டுமே. ஆனால் பல நாடுகளில் தடுப்பூசி செலுத்துவது ஆமை வேகத்தில் நடக்கின்றது.

எனவே தற்போதைய சூழலில் தனியாள் இடைவெளி, முகக்கவசம் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவை மட்டுமே பயனளிக்கின்றன. எனவே கொரோனாத் தளர்வுகளை அறிவிக்கும்போது ஒவ்வொரு நாடுகளும் கவனத்துடன் கையாள வேண்டும் - என்றார். (ஒ.4)

## 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி

### *தடுப்பூசி இறக்குமதி தாராளம்*



கொழும்பு, ஜூலை 12

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தை அண்மிக்கும்போது 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் என்று மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் இந்த வாரம் கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்படும். எதிர்பார்த்தபடி சீனத் தயாரிப்பான 20 லட்சம் சைனோஃபோம் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இதேபோன்று மேலும் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் மற்றுமொரு தொகை தடுப்பூசிகள் இந்த மாதத்தின் 3 ஆவது வாரத்தில் இலங்கைக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)





## கட்டுப்பாட்டை மீறிய பயணம்: பஸ் சாரதி கைது



கொழும்பு, ஜூலை 12

மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறி, கொழும்புக்குள் நுழைய முற்பட்ட பஸ் சாரதி ஒருவர் வெள்ளவத்தையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை ஊருபொக்க பகுதியில் இருந்து, பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பஸ்ஸில் இரண்டு பயணிகள் மாத்திரமே பயணித்துள்ளனர்.

கைதான பஸ்ஸின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

## 10 பிரிவுகள் விடுவிப்பு ஒரு பிரிவு தனிமைக்கு

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு கிராம அலுவலர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதே வேளை 10 பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பரகலை கிராம அலுவலர் பிரிவு நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த 10 கிராம அலுவலர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# மூன்றாவது நாளாகவும் மன்னாரில் செலுத்தப்பட்டது பைஸர் தடுப்பூசி

## மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

மன்னார், ஜூலை 12

மன்னார் மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் 'பைஸர்' கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி 3 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள மக்கள் ஆர்வம் காட்டியதை அவதானிக்க முடிந்தது.

மன்னார் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 'பைஸர்' தடுப்பூசி வழங்கப்படுகின்றது. தலைமன்னார், பேசாலை, மன்னார், வங்காலை, முத்தரிப்புத்துறை மற்றும் மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

நேற்று 3 ஆவது நாளாகவும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மற்றும் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளில் 'பைஸர்' தடுப்பூசி செலுத்தும் பணி இடம் பெற்றது. இன்று திங்கட்கிழமையும் குறித்த பாடசாலைகளில் தடுப்பூசி செலுத்தும் பணி இடம் பெறவுள்ளது.

பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 617 ஏக்கர் காணிகள் கடற்படை முகாமுக்கு

## சுவீகரிக்க மீண்டும் திட்டம்

**முல்லைத்தீவு, ஜூலை 12**

**முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை, வட்டுவாகல் 'கோத்தாபய கடற்படை கப்பல்'கடற்படை முகாமுக்கு சுவீகரிக்க மீண்டும் திட்டமிடப்பட்டுள்ளது.**

2017ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியின் பிரகாரம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளி வாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள 271.62 ஹெக்ரேயர் விஸ்தீரண முடைய காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது என வர்த்தமானி வெளியாகி நில அளவீடு செய்யும் நடவடிக்கை நிலஅளவை திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த வருடங்களில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள், மக்கள் பிரதிநிதிகள் போராட்டத்தை நடத்தியதைத் தொடர்ந்து நில அளவீட்டுப்பணிகள் கைவிடப்பட்டுள்ளன. நில அளவைத் திணைக்களத்தின் வாகனம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் உள்ளிட்டபலர் மீது வழக்கு தொடரப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் வழங்கு நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் கடந்த 8ஆம் திகதியிடப்பட்ட கடிதம் முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவனால் காணி உரிமையாளர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2021 - 05 - 12ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 450) 05 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம் நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நில அளவை செய்வதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு வருகைதந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விவரங்களையும் இனங்காட்டும்படி கேட்டுள்ளார். மேலும் தங்கள் காணியை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படியும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)



# யாழ். ஆயரின் காணியில் நடப்பட்டன 700 தென்னைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

எழுதுமட்டுவாழில் உள்ள யாழ்.ஆயருக்குச் சொந்தமான காணியில் 700 தென்னை மரக் கன்றுகள் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரசால் நாடு முழுவதும் 40 இலட்சம் தென்னை மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் பிரியந்த பெரேராவின் நெறிப்படுத்தலின் கீழ் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்னம் அடிகளார், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் மாவட்ட கியூடெக் நிறுவனத்தின் தலைவர் யூயின் பிரான்சிஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-20)

# பச்சிலைப்பள்ளியில் இதுவரை 74 பேருக்கு கொவிட் தொற்று

கிளிநொச்சி, ஜூலை 12

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை 74 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை 74 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் அவர்களில் 71 பேர் சிகிச்சை முடித்து வீடு திரும்பியுள்ள நிலையில் 3 பேர் இதுவரை தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை 360 குடும்பங்களைச் சேர்ந்த 970 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் அரசால் வழங்கப்படுகின்ற நிவாரணப்பொதிகள் 337 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதி இன்னமும் வழங்கப்படவேண்டியுள்ளன. அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட கிராமமாக சோரன்பற்று கிராமம் காணப்படுகின்றது. அங்கு இதுவரை 14 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் அதிகளவான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்ட கிராமமாக தம்பகாமம் கிராமம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (ப-6)





# முல்லைத்தீவிலும் ஆரம்பிக்கப்பட்டது 40 லட்சம் தென்னைகள் நடும் திட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 12

வீட்டுக்கு வீடு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசால் நாடு முழுவதும் 40 லட்சம் தென்னை மரக்கன்றுகள் நடும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கைவேலிப்பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யங்ஸ்ரார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரோன் ராகவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தென்னங்கன்றுகளை வழங்கியதோடு அவற்றை நட்டார். இந்த நிகழ்வில் வடக்கு மாவட்ட தெங்கு உற்பத்தி முகாமையாளர் ரி.வைகுந்தன் மற்றும் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-19)



மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 12

கொரோனா நோயாளர்களுக்கான மருத்துவ உபகரணங்கள் தெல்லிப்பழை மருத்துவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. வடமாகாண இரட்சணிய சேனை நிறுவனத்தால், மருத்துவமனை பிராந்திய மருத்துவரிடம் நேற்றுமுன்தினம் அந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. 14 லட்சம் ரூபா பெறுமதியான ஒட்சிசன் இயந்திரம், ஒட்சிசன் அளவீட்டுக் கருவிகள் மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்கள் ஆகியனவே இவ்வாறு கையளிக்கப்பட்டன. (ப-159)

# ஏ-9 வீதியில் விபத்து: இளைஞன் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்

ஏ9 வீதியில் தெற்கு நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும், அவ்வீதியில் வடக்கு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் படுகாயம் அடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# ஒரே நாடு வெவ்வேறு சட்டம்

கொரோனா என்ற உலகே நடுங்கும் நோயைக் கூட தங்கள் அரசியல் ஆதாயத்துக்கான ஆயுதமாகப் பயன்படுத்தும் கெட்டித்தனம் இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரம் கிடைத்த ஒரு கொடுப்பினை. கொரோனா என்ற பேரில்தான் இந்த அரசாங்கத்தால் தமிழர்களின் நினைவேந்தல்களை தடுக்க முடிந்தது. இப்போது அதன் அடுத்த கட்டமாக தனக்கு எதிரான கருத்தாளர்கள் மீதும் இன, மத, மொழி பேதமின்றி கொரோனாவை ஆயுதமாகப் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதிலும் கடந்த 8ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொத்தாலவல பல்கலைக் கழகச் சட்டத்துக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது அரசாங்கம் மிக அநாகரிகமாக நடந்தது. எந்தவித வன்முறையிலும் ஈடுபடாமல், தமது எதிர்ப்பை ஜனநாயக முறைப்படி வெளிப்படுத்திய ஆர்ப்பாட்டக்காரர்களை, ஏதோ கொலைக்குற்றவாளிகளைப்போல துரத்திப் பிடித்து, பஸ்களில் ஏற்றி, பின்னர் அவர்களை மாற்றுடை கூட இல்லாமல் முல்லைத்தீவில் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைத்திருக்கிறது இந்த அரசாங்கம்.

வேடிக்கை என்னவென்றால், அதேதினத்தில்தான் பஸில் ராஜபக்ச நிதியமைச்சராக பதவியேற்று, நாடாளுமன்றுக்குள் பிரவேசித்தார். இந்த நிகழ்வை ஏதோ மகேந்திர பாகுபலியின் பதவியேற்பைப் போல கொண்டாடி மகிழ்ந்தார்கள் பஸிலின் ஆதரவாளர்கள். அதுவும் சாதாரணக் கொண்டாட்டமல்ல. வீதிகள் எங்கும் பட்டாசு கொளுத்தி, இனிப்புகள், பிஸ்கட்டுகள், கேக் என்பனவற்றை வீதியால் பயணிப்போருக்கு விநியோகித்து இந்தக் கொண்டாட்டம் நாடெங்கும் நிகழ்ந்தது. ஜனாதிபதியாக கோத்தாபய தெரிவானபோது கூட இப்படியான அமர்க்களங்கள் நடக்கவில்லை. ஒருவேளை இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் போன்ற பதவிகளை விடவும் நிதியமைச்சர் பதவிதான் வலிமையானது என பஸிலின் ஆதரவாளர்கள் நினைத்தார்களோ என்னவோ. ஜனநாயகரீதியிலான எதிர்ப்பை வெளிப்படுத்துபவர்கள் கூட கொரோனாப் பெருந்தொற்றுக் காலச்சட்டங்களால் குண்டாங்கட்டாக வாகனங்களில் ஏற்றப்பட்டு, தனிமைப்படுத்தப்படும் நாட்டில் இப்படி சாதாரண நாள்களில் நடப்பதைவிடவும், வெகு அமர்க்களமாக பெருமளவானோர் வீதிகளில் கொண்டாடி மகிழ்வதை எந்தச் சட்டமும் தடுக்கவில்லை. எந்தவொரு பொலிஸாரும் நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக அந்தக் கொண்டாட்டங்களில் வழங்கப்பட்ட சிற்றுண்டிகளை பல இடங்களில் பொலிஸாரும் வாங்கி உண்டு மகிழ்ந்தனர். பாவம், அவர்களுக்கும் பசிக்கும் தானே.

ஒரே நாடு, ஒரே சட்டம் என்று சொல்லிக் கொண்டே இருவிதமான நிலைப்பாடுகளை ஒரேநாளில் இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சமூக இடைவெளியைப் பேணியிருந்தனர். வீதியால் பயணிப்போருடன் எந்தவித தொடர்பாடல்களையும் ஏற்படுத்தவோ, போக்குவரத்தை குழப்பவோ முற்படவில்லை. அவர்கள் செய்ததெல்லாம் அநியாயத்துக்கு எதிராகக் கோஷமிட்டமையும், கையில் சுலோகப் பதாகைகளை ஏந்தியமையும் தான். அதற்காக அவர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தல் என்ற தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால் போக்குவரத்தை குழப்பி, பஸ்களில் ஏறி சிற்றுண்டிகளை வழங்கி, பட்டாசு கொளுத்தி, கும்பலாக் கூடி ஆடி கொரோனாக் கொத்தணிக்கான அத்தனை ஆரம்பப் பணிகளையும் செய்த கொண்டாட்டக்காரர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுவரை காலமும் இப்படி ஒரே சட்டத்தை தனக்கு வேண்டியவர்களுக்கு ஒரு மாதிரியும், எதிரானவர்கள் மீது வேறு மாதிரியும் தமிழர்கள் மீதே அரசாங்கம் பிரயோகித்திருந்தது. உதாரணமாக ஜே.வி.பியின் கார்த்திகை வீரர்கள் தினத்தை அனுஷ்டிக்க அனுமதித்த இதே அரசாங்கம், தமிழர் தாயகத்தில் மாவீரர் நாளையோ, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையோ அனுஷ்டிக்க இடமளிக்கவேயில்லை. இப்போது தென்னிலங்கையிலும் 'ஒரே நாடு வேறு வேறு சட்டங்கள்' என்ற உத்தியை ஆட்சியாளர்கள் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். தொற்றுநோயை அடக்க கொண்டுவரப்பட்ட சட்டங்களால், தன் எதிராளிகளை ஒடுக்க நினைப்பதை விட இழிசெயல் வேறொன்றும் இருக்கமுடியாது. ஆனால் தங்கள் ஆட்சியதிகாரத்தை தக்க வைக்க எந்த இழிசெயலையும் செய்ய இந்த அரசாங்கம் தயங்கப்போவதில்லை என்பதை அண்மைய நாட்கள் எமக்கு உணர்த்துகின்றன. அதர்மம் தலை தூக்குகின்ற போதுதான் தர்மத்தின் பேரெழுச்சி நிகழுமென்பர். அது எப்போது?




# மௌனம் கூட புரட்சிதான்!

## விமல் வீரவன்ஸவின் 'உருட்டு' இது!

கொழும்பு, ஜூலை 12

"மௌனம்கூட ஒருவித புரட்சிதான். புரிந்து கொள்ளக்கூடியவர்களுக்கு அதன் அர்த்தம் நன்றாகவே புரியும். இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் தொடர்ந்தும் இருக்கின்றோம்." என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த ஏற்பாடு 20ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நீக்கப்பட்டது. இதற்கு விமல் வீரவன்ச கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அரசியலில் மட்டுமல்ல அரச உயர் பதவிகளிலும் இரட்டைக் குடியுரிமை உடையவர்களுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தி வந்தார். எனினும், அவரின் கோரிக்கை எடுபடவில்லை.

எனினும், புதிய அரசமைப்பின் ஊடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் எனக் குறிப்பிட்டு 20 ஐ விமல் ஆதரித்தார். தற்போது பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்துள்ளார். சமகாலத்தில் விமல் வீரவன்ச மௌனப் போக்கை கடைப்பிடித்து வருகின்றார்.

இந்தநிலையில், அவரின் வருகை மற்றும் இரட்டைக் குடியுரிமை உடைய பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற பிரவேசம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் விமலிடம் கேள்விகளை எழுப்பினர். இவற்றுக்கு அவர் வழங்கிய பதில்கள் வருமாறு,

"மௌனமும் ஒருவித குரல்தான். அதில் சிறந்த அர்த்தங்கள் உள்ளன. புரிந்துகொள்ளக்கூடியவர்களுக்கு அதனை தெரிந்து கொள்ளமுடியும். பஸில் ராஜபக்சவோ அல்லது வேறு நபர்களோ நாடாளுமன்றம் வருவதை நாம் எதிர்க்கவில்லை. 20ஆவது திருத்தச் சட்டத்தின்போது இரட்டைக் குடியுரிமை தொடர்பான பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். அந்த நிலைப்பாட்டிலேயே நாம் இன்றும் இருக்கின்றோம்.

பஸில் ராஜபக்சவும் எமது அரசின் பங்காளி. அரசின் பங்காளியாகவுள்ளவர்களுக்கு உரிய பதவியை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அந்த உரிமையை எம்மால் நிராகரிக்க முடியாது. பொருளாதார மட்டத்திலான சவால்களை வெற்றிகொள்ள முடியுமென்றால் அது மிக முக்கியம். " - என்றார்.

(த-44)

# 'சுதந்திரக் கட்சியே வெளியேறு'!

## மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 12

"எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறலாம். அதனால் அரசுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

அரச பங்காளிக்கட்சியாக இருந்தபோதிலும் சுதந்திரக் கட்சிக்கு பாரபட்சம் காட்டப்படுவதாகவும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய உதவியை மொட்டுக் கட்சி மறந்துவிட்டதாகவும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர்.

குறிப்பாக சுதந்திரக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர வெளிப்படையாகவே விமர்சனங்களைத் தொடுத்துவருகின்றார். மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் தயாசிறி உள்ளிட்ட சு.க. உறுப்பினர்களுக்கு பதிலடி கொடுத்துவருகின்றனர். முடியாவிட்டால் அரசிலிருந்து வெளியேறலாம் என்ற அறிவிப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்த நிலையில்,அதனை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தவிவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,"ஜனாதிபதித் தேர்தலின்போது மட்டுமே சுதந்திரக் கட்சியின் ஆதரவு கிடைத்தது. பொதுத்தேர்தலில் எம்முடன் இணைந்து மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டதாலேயே அந்தக் கட்சிக்கு ஆசனங்கள் கிடைத்தன. தனித்து போட்டியிட்டிருந்தால் ஓரிரு ஆசனங்கள்கூட கிடைத்திருக்காது.

கட்சி என்ற அடிப்படையில் சுதந்திரக் கட்சியால் தீர்மானங்களை எடுக்கமுடியும். இணைந்து பயணிப்பதாக இருந்தால் அந்தவழியில் செல்லலாம். வெளியேறுவதாக இருந்தால் தாராளமாக வெளியேறலாம். அவர்கள் இருந்தாலும், வெளியேறினாலும் அரசின் திட்டங்களுக்கு எவ்வித தாக்கமும் ஏற்படப்போவதில்லை. அவர்கள் சிறு அணியினர் மட்டுமே." - என்றார்.

(த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வீட்டுத்திட்டத்தை அரசியலாக்கி வடபகுதியினரை ஜெனிவாவுக்கு தள்ளாதீர்

## எதிர்க்கட்சி உறுப்பினர் மாக்கார் வலியுறுத்து




**கொழும்பு, ஜூலை 12**

**வடக்கு மக்களின் வீட்டுத்திட்ட கோரிக்கையை அரசு நிறைவேற்றவேண்டும். மாறாக இதனை அரசியலாக்கி அவர்களை ஜெனிவாவுக்கு தள்ளிவிடக்கூடாது. வசதி குறைந்த மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கிலேயே வீடமைப்பு அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டது என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வசதி குறைந்த மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலே 1979இல் வீடமைப்பு அதிகார சபை அமைக்கப்பட்டது. நாட்டில் எந்த பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களாக இருந்தாலும் அவர்கள் யார், எந்த இனம், கட்சி என பார்க்காமலே இந்த துறையை மேற்கொள்ளவேண்டும். அந்தவகையில் வடக்கில் வீடமைப்பு திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது, யுத்தத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களும் அநாதரவான குடும்பங்களுமாகும். அங்கு கட்டப்பட்ட வீடுகள் முழுமைப்படுத்தப்படாமல் இருக்கின்றமையால், அவற்றை முழுமைப்படுத்தி வழங்கவேண்டும். ஆனால், அதற்காக வழங்கப்பட்டுவந்த அவர்களுக்கான கடன் கொடுப்பனவு வசதிகளை அரசு நிறுத்தி இருக்கின்றது.

அதனை வழங்கவேண்டும் என்பது மக்களின் நியாயமான கோரிக்கையாகும். மக்களின் நியாயமான கோரிக்கைகளை அந்த மக்களின் பிரதிநிதிகள் அரசிடம் முன்வைக்கின்றபோது, அதனை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். மாறாக குறுகிய அரசியலுக்காக இன,மத, அரசியல் வேறுபாடுகளைக் காட்டி, அவர்களை ஜெனிவாவுக்கு தள்ளிவிடக்கூடாது. சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்து வடக்கில் 5 மாவட்டங்களில் 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க 480 முன்மாதிரி வீட்டுத்திட் டங்களை அமைத்திருந்தார். இது வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்றதாகும். அதனால் வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்தி, அதற்கு பயனாளிகளை தெரிவுசெய்யும்போது, அரசியல், கட்சி பேதங்களை பார்க்காது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டு- என்றார். (த-இ)





## வவுனியா பொதுச்சந்தையில் 112 பேருக்கு பி.சி.ஆர்.

வவுனியா,ஜூலை 12

வவுனியா பொதுச்சந்தையில் 112 பேருக்கு சுகாதாரப் பிரிவினரால் பி.சி ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொதுச்சந்தையில் கடந்த வாரம் சிலருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து அப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தோர் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கான பரிசோதனையே நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-18)

## தென்மராட்சியில் மூவருக்கு தொற்று

சாவகச்சேரி,ஜூலை 12

தென்மராட்சி பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இருவர் உள்ளிட்ட மூவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த ஒருவருக்கும். சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவருக்கும் காய்ச்சல் ஏற்பட்டது.

இதனையடுத்து இவர்கள் இருவருக்கும் கைதடியைச் சேர்ந்த ஒருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூவரும் கோப்பாய் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-9)

### தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில்

## இதுவரை தடுப்பூசி பெறாத முதியோருக்கு இன்று சந்தர்ப்பம்

சாவகச்சேரி,ஜூலை 12

தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் இதுவரை கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று திங்கட்கிழமை அப்பகுதியில் உள்ள இரு பொதுநோக்கு மண்டபங்களில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு . கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி தெற்கு, தனங்களப்பு மற்றும் மறவன் புலவு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும்.

தனங்களப்பு மற்றும் மறவன்புலவு பொதுநோக்கு மண்டபங்களில் தலா ஒரு மணி நேரம் தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## யாழ். மத்திய கல்லூரி மாணவருக்கு அறிவித்தல்

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக பாடசாலை மூலம் தோற்ற இருக்கும் மாணவர்களை அடையாள அட்டையுடன் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு யாழ். மத்திய கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ.319)

### வவுனியா மாவட்டத்தில்

## பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த 3,025 பேருக்கு இன்று தடுப்பூசி

வவுனியா,ஜூலை 12

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை சமூகத்தினரான 3 ஆயிரத்து 25 பேருக்கான கொவிட் தடுப்பூசி இன்று திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட நபர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

2 ஆயிரத்து 802 ஆசிரியர்களும், 205 அதிபர்களும், 198 பாடசாலை மற்றும் வலயத்தில் பணியாற்றும் ஏனைய ஊழியர்களும் இவற்றுள் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில் வவுனியா வடக்கு வலயத்தில் 926 நபர்களும் (நெடுங்கேணி 358 நபர்கள், ஓமந்தை 568 நபர்கள்), வவுனியா தெற்கு வலயத்தில் 2 ஆயிரத்து 279 நபர்களும் (தெற்கு சிங்கள பிரிவு 383 நபர்கள் ,தெற்கு தமிழ் பிரிவு ஆயிரத்து 419 நபர்கள், வெங்கலச் செட்டிக் குளம் 477 நபர்கள்) என 3 ஆயிரத்து 205 நபர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஐ-18)

## ஒழுங்கான திட்டமிடல் இன்மையால் தடுப்பூசி ஏற்ற ஆசிரியர்கள் அலைச்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் ஒழுங்கான திட்டமிடல் இன்மையால் அவர்கள் பெரும் அலைச்சலை எதிர்நோக்கியுள்ளனர்.

ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு பாடசாலை தெரிவுசெய்யப்பட்டு அந்தக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் ஆசிரியர்களில் ஒரு சிலர் வேறு மாகாணங்களில் கடமையாற்றுகின்றனர். நூற்றுக்கணக்கானோர் வடக்கு மாகாணத்தின் வேறு மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர்.

அவர்கள் அனைவரையும் கடமையாற்றும் கோட்டத்துக்கே சென்று தடுப்பூசி ஏற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளது. மாகாணத்துக்கு இடையிலான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசி ஏற்றுவதற்கு வேறு மாகாணத்துக்குச் செல்ல முடியாது. யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி ஏற்றுமாறு கோரிய போது மறுக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர்களை அவர்களின் வதிவிடத்திலேயே தடுப்பூசி ஏற்ற ஒழுங்கு செய்திருந்தால் இவ்வாறான அலைச்சல்கள் ஏற்பட்டிருக்காது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்தை அடக்கும் அரச தரப்பின் ஆயுதம் 'கொரோனா'

## சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 12**

**இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது தெரிவுசெய்யப்பட்ட அடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருப்பதானது, கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவியாக அரசு கொரோனா வைரஸ் பரவலைப் பயன்படுத்துகின்றது என்பதையே வெளிப்படுத்தியிருக்கிறது" என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

AMNESTY INTERNATIONAL

பொதுமக்கள் அதிகளவில் ஒன்று கூடும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் மறு அறிவித்தல்வரை தடை செய்யப்படுகின்றன என்று கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் தலைமையகத்தால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமையிலிருந்து பலதரப்பட்ட கோரிக்கைகள் மற்றும் உரிமைகளுக்காகப் போராடுவோரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். குறிப்பாக கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தூக்கிச்சென்று பொலிஸ் வாகனங்களில் ஏற்றும் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டன.

அதுமாத்திரமன்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டுள்ளமை, பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் அரசின் முறையற்ற செயற்பாடுகளை விமர்சிக்கும் சுதந்திரத்தையும் பறிப்பதாக அமையும் என்று பல்வேறு தரப்பினராலும் கண்டனங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்தநிலையில், சர்வதேச மன்னிப்புச்சபையால் அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பிட்டுள்ளது.

நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசு புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை வெளியிடுவதாக இருந்தால், எந்தவொரு தரப்பினரையும் அடக்குமுறைக்கு உட்படுத்தாத வகையில் அனைவருக்கும் பொதுவானதாக அந்த வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்றும் மன்னிப்புச்சபை அதன் ருவிற்றர் பதிவில் வலியுறுத்தியிருக்கின்றது. (து-இ)

# இராஜேஸ்வரி அறக்கட்டளையால் 18 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

யாழ்ப்பாணம் ஜூலை 12

வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அச்செழு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வீடுகள் இல்லாத 18 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்து வழங்குவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

இராஜேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் இராஜேஸ்வரி அன்புச்சோலை என்னும் பெயரில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்ட அடிக்கல், அறக்கட்டளை நிதியத் தலைவர் கலாநிதி செல்லத்துரை திருமாறன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன்,யாழ் மாவட்ட காணி ஆணையர் முரளிதரன், கோப்பாய் பிரதேச செயலர். சுபாஷினி மதியழகன், கலாநிதி செல்லத்துரை இராஜேஸ்வரி மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-9)

# 25 குடியிருப்புகளுக்கு மரங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜூலை 12

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் மீள்குடியமர்ந்த 25 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அமைப்பதற்குரிய மரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

றஹமா நிறுவனத்தினர் இவ்வாறு மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக குடியி ருப்புக்களும், மலசலகூடங்களையும் அமைத்து வழங்கவுள்ளனர்

இந்த நிலையில் குடியிருப்பு அமைப்பதற்குரிய மரங்களை நேற்றுமுன்தினம் நிறுவனத்தினர் வழங்கினர். (ஐ-9)


# விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர் கைது

கொழும்பு,ஜூலை 12

போலியான தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்கினர் என்ற குற்றச்சாட்டில், விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மற்றும் ஆலோசகர் ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை உலர்ந்த பாக்குகளுக்கு, போலியான தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்கினர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை சுங்கப் பிரிவினர், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாகவே இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக சி.ஐ.டி.யினர் பல அறிக்கைகளை பதிவுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் வேறு யாராவது தொடர்புகொண்டுள்ளனரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.4)



மேடு பள்ளமாக காணப்பட்ட நாவற்குழி செங்கத்திடல் வீதி (சித்திர வேலாயுதர் கோவில் வீதி) தற்போது தார் வீதியாக சீரமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 42 லட்சத்து 89 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

# வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 12

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் இராணுவத்தின் இலவச மனித வலுவால் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாமுனை கிராமத்தில் பொருண்மியம் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு குறித்த வீடு கையளிக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் 10ஆவது விஜயபாகு காலாட் படையணியின் சரீர ஒத்துழைப்பிலும் 553 காலாட் படைத்தளபதியின் வழிகாட்டலிலும், 55ஆவது காலாட் கட்டளைத் தளபதியின் பூரண ஏற்பாட்டிலும் குறித்த இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. (ப-214)



# பூநகரி பிரதேசத்தில் 3 வீதிகள் சீரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட மூன்று வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்று பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ( RIDEP) மூலமாக உலக வங்கியின் நிதி மூலம் மூன்று வீதிகள் சீரமைக்கப்படுகின்றன.

குமுழமுனை [illegible] வீதி 19 அம் கட்டை சந்தியில் இருந்து குமுழமுனை வரை 2.2 கிலோ மீற்றர் வரையான வீதி 35.14 மில்லியனிலும், ஜெயபுரம் மாதா சொரூப வீதி (1.5 கிலோ மீற்றர்) 23.98 மில்லியனிலும், முட்கொம்பன் யட்டன் வீதி (2.0 கிலோ மீற்றர்) 36.44 மில்லியனிலும் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாக மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேச சபையால் இவ் வீதிகள் சீரமைக்கப்படுகின்றன. இதன்மூலம் மக்களின் போக்குவரத்து இலகுவாக அமையும்- என்றார். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

**கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதற்குரிய பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலர்களால் தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பட்டியல் இங்கே வெளியிடப்படுகின்றது. இந்தப் பட்டியலில் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டு தகுதியில்லாதவர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான ஆட்சேபனைகளை பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்வைக்க முடியும்.**

*உதயனின் 077 120 9994 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டும் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். முறைப்பாடுகளின் உண்மைத்தன்மையை உதயன் ஆராய்ந்து அதனை பிரசுரிப்பதுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமும் சேர்ப்பிப்பான்.*

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

நாகராசா சசிகரன் J/129 சதானந்தன் சர்வானந்தன் J/129 தைரியநாதர் பிலேவியன் J/130 கணபதிப்பிள்ளை நந்தகுமார் J/130 மாயவன் பிரகலாதன் J/130 தில்லையம்பலம் சற்குணசீலன் J/130

கெங்காதேவி கமலேஸ்வரன் J/131 மனோகரன் மன்மதன் J/131 தவராசா ரகு J/131 ஜோனஸ் யுளியன் J/133 மாணிக்கம்பிள்ளை ரஞ்சித்குமார் J/133 சிவஞானம் தேவகனிஸ்வரன் J/133 அந்தோனி பெனிக்நாதன் J/134 அந்தோனிப்பிள்ளை குபெந்திரன் J/134 குகராசா சசிக்குமார் J/134 கனகசபை கணேசமூர்த்தி J/134 புபாலசிங்கம் விஜயராஜா J/134 தெய்வேந்திரம் கோகுலன் J/135 லோறன்ஸ் சுபாஸ்கரன் J/135 கதிரவேலு விஜயன் J/136 நாகராஜன் மோகனசுந்தரம் J/136 செல்வராசா பவளம் J/136 இராசையா கனனேஸ்வரன் J/136 கறுப்புசாமி சிவகுமார் J/136 துரைராஜா புஸ்பவதியம்மா J/137 கமலாபஸன் சர்மிளா J/137 ஆறுமுகம் கிருபாகரன்J/137 குணசீலன் ஜெயசீலன் J/137 சோமசுந்தரம் சசிதரன் J/138 சிவகுரு ஜெயரூபன் J/138 நல்லையா சந்திரகுமார் J/138 முருகேசு நவரட்ணம் J/138 தவராஜா லேபோன் பத்மநாதன் J/138 பொன்னை தங்கதுரை J/139 தேவராசா பிரசிதன் J/139 கனகிங்கம் சுரேஸ் J/139 மார்கண்டு மகிழ்மணி J/139 பொன்னுத்துரை தவகுமார் J/139 கனகலிங்கம் சுதர்சன் J/139 ஞானசீலன் அந்தோனி J/140 நல்தம்பி செல்வரத்தினம் J/140 நாகரத்தினம் சக்திவளவேல் J/140

பொன்னுத்துரை வசந்தகுமார் J/140 நாகமுத்து தங்கேஸ்வரன் J/141 ஈஸ்வரன் குயேந்திரன் (மு.டயானி) J/141 தேவதாசன் திலீபன் J/141 மகேஜ்வரன் சிவகரன் J/141 தேவராசா சதீஸ்குமார் J/141 சிலுவைதாஸ் ரஜீவன் J/142 அருமைத்துரை ஜெனிஸ்கரன் J/142 குணசிங்கம் தயானந்தன் J/142 சிறிகாந்தா குமரேசன் J/142 முருகையா சாந்தகுமார் J/142, கனகசபை இளைசேந்திரம் J/143, கந்தையா தர்மராசா J/143, கீருஸ்யர் நித்தியானந்தம் J/143, குணசிங்கம் ரமேஸ் J/143, தனபாலா செல்வராணி J/144 ,சிலவலிங்கம் பிரகாஸ் J/144, கிருஸ்ணன் ஜெகதீஸ்வரன் J/144, நீலன் நாகமுத்து J/145 ,அமிர்தலிங்கம் ஜெயராணி J/146, சீனியன் செல்வராசா மேரி ரஞ்சிதம் J/146, சுந்தரலிங்கம் கோவிந்தராசா J/147, சிறிகாந் அருந்தவமலர் J/147 நாகராசா திருநாவுக்கரசு J/147 நவரத்தின்ம் சிவமாலா J/148, டொமினிக் டெலிசி சுசிலா J/148, மாணிக்கம் கீருஸ்ணபிள்ளை J/148, யோகேஸ்வரன் ஜெகதீஸ்வரன் ரஞ்சினி J/148, தங்கராசா பாலகிருஸ்ணன் J/148, லக்ஸ்மன் ேஅரிகுயின் J/149 வின்சன் ஜோன் பிரான்ஸிஸ் J/149 புாபர்தீன் முகமட் ஹா்ன் J/149 குணரத்தினம் ரகு J/150 ,கனேஸ் குகன் J/150, சிங்கராசா சிவனேஸ்வரன் J/150, நல்லையா புஸ்பராசா J/150, கந்தசாமி யோகேஸ்வரன் J/151 ஜெயதாஸ் ரூபாமாலா J/151, யேசுரத்தினம் அன்ரன் சுரியகுமார் J/151, ஜெகப் றெறன்ஸ் J/151, கேசவன் சிவரஞ்சினி J/152 கந்தசாமி ஆரோக்கியநாதன் J/152, ணேசுரட்ணம் யேசுராஜா J/152, வேதநாயகம் அன்ரன் டேவிட் J/153,நிக்ஸன் மேரி ஸெயறீற்றா J/153 ,கிருஸ்ணபிள்ளை வேலாயுதம் J/154 கந்தையா அருந்தவராசா J/154,பிலிப்பு ஆபிரகாம் J/155, அமலோற்பவநாயகம் யுட் அமல்ராஜ் J/155 யூசியஸ் கொன்சிலி அன்னம்மா J/156, நரசிங்கம் சதாசிவம் J/156

### ஆறு லட்சம் ரூபா வீடு

இராசலிங்கம் இந்திராணி J/129, விஜயரத்தினம் சாந்தினி J/129, பரமலிங்கம் ரஞ்சனாதேவி J/130,மோகனதாஸ் விஜயவாணி J/130,சிவானந் கந்தையா J/131,பிரம்மபாஸ்கரன் புஸ்பராணி J/132,சிவகுரு சரஸ்வதி J/133,முத்துக்கிருஸ்ணன் வசந்தி J/134,அந்தோனிப்பிள்ளை சுசைநாதன் J/134,சிவனேசன் ஜெயராணி J/135,செல்வஞானம் புஸ்பராணி J/136,மனோகரன் சிந்துஜா J/136,சதீஸ்குமார் காந்திமதி J/137,முருகேசு இராசதுரை J/138,சுப்பிரமணியம் யோகநாதன் J/138,சுப்பிரமணியம் இன்பமலர் J/139,வீரவாகு மாணிக்கம் J/141,சதீஸ்குமார் வனிதாதேவி J/141,சண்முகலிங்கம் யோகேஸ்வரி J/142,இராஜேந்திரகுமார் ரஜனி J/142,ஜயம்பிள்ளை வில்வராசா J/143,உதயகுமார் புவனேஸ்வரி J/143,கந்தசாமி சசிகலா J/144,சிறிகந்தராசா சைலகுமாரி J/144,பசுபதி நவமலர் J/145,சுப்பிரமணியம் ஜெயபிரசன்னா J/146,கேதீஸ்வரன் செல்வராணி J/147,வன்னியசிங்கம் சரஸ்வதி J/147,நல்லதம்பி சிவலிங்கம் J/148,நிகலன் மசீலன் J/148,ஜோன்சன் லியோகதியம்மா J/149,பொன்னர் தவநாயகம் J/150,மகேந்திரன் சிவராணி J/150,குமரன் உமாதேவி J/152,சின்னத்தம்பி செல்வநாயகம் J/152,பிரான்ஸிஸ் கலிஸ்ரா J/153,சின்னத்துரை ஸ்ரலின்பயஸ் J/153,செந்தூரன் சுகந்தினி J/154,தியாகராசா ரசிகரன் J/154,பிரதீப் மேரி ஆன் டொறின் J/155,நல்லையா மகாலட்சுமி J/156,ஏ. யுடிற் ஜெயராணி J/156

## உடுவில் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

பிரபாகரன் பிரேமரஜனி J/183,,சுந்தரலிங்கம் மதிமலர் J/194,திரவியம் ஜெயராணி J/190,கதிரவேலு விஜயலிங்கம் J/182,இளங்கநாதன் ஜெயலடட்சுமி J/183,சுப்பிரமணியம் புனிதவதி J/200,குலசேகரம் சிறிவஸ்தன் J/203,பொன்னர் வடிவேலு J/204,வேலுப்பிள்ளை இஜேந்திரம் J/186,சின்னத்துரை ஸ்ரீறீஸ்கந்தராசா J/182,வடிவேலு ஜெயராணி J/182,தவக்குமரர் புஸ்பமலர் J/183,மாணிக்கம் சூரியகுமரர் J/183,சாந்தகுமரர் மங்களேஸ்வரி J/183,அன்ரன் அலோசிக்கமலா J/185,இராஜேந்திரன் ரஜனி J/185,சின்னத்தம்பி ஜெயபாலன் J/185,தம்பிப்பிள்ளை தங்கராசா J/186,செல்வரத்னம் அற்புதராணி J/187,வித்தியானந்தன் பரமேஸ்வரியம்மா J/188,மகேஸ்வரன் ஜெந்தினி J/190,நாகமுத்து சிவபாக்கியம் J/192,அருந்தவசெல்வன் அருன்றோஜீவ் J/193,தம்பித்துரை செல்வராணி J/194

சின்னத்துரை கருணமூர்த்தி J/194,செல்லத்துரை யோகராசா J/194,இராசேந்திரம் இராசகுமரர் J/194,பாலகிருஸன் வளர்மதி J/195,நாகேந்திரம் தங்கநாயகம் J/196 நவரத்னம் சரோஜினி J/196,சசிகரன் சுபாசினி J/196,செல்லையா சர்வேந்திரன் J/197,ஜெயக்குமரர் வனிதா J/198,கந்தியா செல்வரத்தினம் J/202,குண்டுமணி கிருபாகரன் J/202,செல்வராசா கிருபாகரன் J/203,சிவசம்பு சிவகுமரன் J/204

அருணாசலம் குணசேகரம் J/205,மலர்ந்தகுமரர் தவமலர் J/205,சரோஜினிதேவி தில்லைநாதன் J/205,ரமேஸ் வனிதா J/207,விமல்ராஜ் ஜெயருபி J/207,ஜேசுராஜா சுபேதா J/208,ரஞ்சன் அழகேஸ்வரி J/208,ஈஸ்வரன் சுபாசினி J/209,நாகராசா சுசீலாதேவி J/209,தம்பிராசா மகேஸ்வரி J/210,ரத்தினசிங்கம் மங்கயர்திலகம் J/210,கந்தசாமி இராஜேஸ்வரி J/210,மாணிக்கம் குகனேஸ்வரன் J/211,கந்தசாமி காந்தரூபன் J/208,தேவராசா பிரசிந்தன் J/202,சின்னப்பு அருமைத்துரை J/196

சின்னராசா சுந்தரமூர்த்தி J/196,சுந்தரம் அரசம்மா J/190,நாகேந்திரம் இராஜேஸ்வரி J/186,சிவராசா நிகாஜினி J/203,சிவகுமார் அனுசியா J/187,செல்வராசா கஜேந்திரன் J/193,ஜெயகுமார் சுவதா J/194,மார்க்கண்டு ஜெயகுமார் J/195,மணியம் விஜேந்திரன் J/184,செல்லர் இந்திரலிங்கம் J/203,பழனி மனோகரன் J/203,அருளானந்தம் கலைவாணன் J/190,சிவஞானம் சிவசங்கர் J/211,சிவசுப்பிரமணியம் இராசகுமரன் J/193,ஜயன் தயாபரன் J/203,இராசேந்திரம் தவராசா J/210,விஜயகரன் ரஜி J/203,கமலேந்திரன் தங்கராணி J/207,சின்னத்தம்பி மகாதேவன் J/182,சின்னத்தம்பி மகாதேவன் J/186,வரதன் கௌரி J/190,கந்தையா சச்சிதானந்தம் J/195,கிசாந்தன் சுமித்திரா J/196,ரட்ணசிங்கம் தயாநிதி J/196,ஆன் றொ'ானி றோஸ் பிறாக் அன் செலன் J/198,சந்திரலிங்கம் சிவகௌரி J/200,கிட்டிணன் சிவகுமார் நவநிதா J/203,மார்க்கண்டு ரஞ்சினி J/203,ஜெயந்தா கல்பனா J/205,விக்னேஸ்வரராசா சாரதா J/206,தவகுலசிங்கம் மஞ்சுளா J/207,பிரபாகரன் புஸ்பராணி J/207,விக்னேஸ்வரன் இராஜேஸ்வரி J/208,லவகுசா அனுசாவதி J/209,லவகுசன் சிவாஜினி J/209,புதன் துரைராஜசிங்கம் J/210,துரைராஜசிங்கம் சிவசக்தி J/207 மகேந்திரம் சந்திராணி J/207,தவராசா குமுதினி J/196,ஞானசேகரம் ஞானேஸ்வரி J/182

### ஆறு லட்சம் ரூபா வீடு

செல்வராசா மகாலட்சுமி J/192, ஜெயகுமார் தர்சினி J/196,தங்கதுரை புஸ்பராணி J/182,செல்லையா மேரி சரோஜினி J/183,ஜயாதுரை புவனேஸ்வரி J/185,சுப்பிரமணியம் அழகம்மா J/186,மகாலிங்கம் வசந்தி J/190,மாணிக்கம் தங்கம்மா J/190,செல்வநாயகம்பிள்ளை செல்வராணி J/191,அப்புத்துரை கருணாநிதி J/191,முரகர் பசுபதி J/192,செல்லத்துரை புவனேஸ்வரி J/196,கந்தசாமி சந்திரகாந்தியம்மா J/199,இராசையா சிவபாக்கியம் J/199,கந்தசாமி நேசமலர் J/200

இராசலிங்கம் நிமலரஞ்சினி J/200,சிவலிங்கம் சந்தானபாக்கியம் J/205,இளைமமூர்த்தி யோகமலர் J/205,தம்பிராசா ரட்ணேஸ்வரி J/208,சீனித்தம்பி குணலிங்கம் J/210,தம்பிராசா இந்திராணி J/192,நாகராசா சரஸ்வதி J/196,மகேந்திரம் வசந்தமலர் J/184,சிறிகாந்தரூபன் சிறிகாநதரூபி J/183,செல்வரட்ணம் புஸ்பானந்தலதா J/186,கணேசலிங்கம் புஸ்பகலா J/187,சிங்கராசா விக்னேஸ்வரி J/192,நவரசசிங்கம் வனிதா J/192,ஜெசிந்தகுமார் வதனா J/192,ஜெயரட்ணம் சுவாஸ்கினி J/194,பரராஜசிங்கம் கமலதேவி J/194,மகாலிங்கம் வசந்தராணி J/196

ரமேஸ்குமார் ரஜினி J/196,றேமன் டெக்ஸ்மன் லோகேஸ்வரி J/196,சர்வேஸ்வரன் சுதாயினி J/196,வரதராசா திலகேஸ்வரி J/196,சந்திரகுமார் சத்தியலோஜினி J/203 சிறிகுமார் ரஜிதா J/203,மகாலிங்கம் புஸ்பரதி J/206,சசிதரன் ஆனந்தி J/209,சிவராசா சரோஜினிதேவி J/203,சிவலிங்கம் வசந்தி J/203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

## தெல்லிப்பழை பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

தில்லையம்பலம் உதயகுமார் J/212, திருசெல்வம் புருசேத்தமன் J/212,ரத்தினம் தெய்வேன்திரம் J/212,கதிரமலை கமலநாதன் J/212,ரத்தினம் மகேந்திரம் J/212, கதிரவேலு தவச்செல்வம் J/212,மார்க்கண்டு சந்திரபாலு J/212,பாலசந்திரன் அகிலன் J/212,மருதர் தவராசா J/212,ராமச்சந்திரன் விஜிதரன் J/212,ராமசந்திரன் சந்திரகாந்தன் J/212,ஐயாத்துரை குழேந்திரன் J/213,தேவதாஸ் அற்புதமலர் J/213,செல்வராஜா தயாரூபன் J/213,கணபதிப்பிளைளை விக்னேஸ்வரன் J/213, துரைராசா ரகுனாதன் J/213,ஐயம்பிள்ளை சண்முகவேல் J/213,ஜேசுதாஸ் பிரதீப் J/214,சிலகுமார் ஜெயபவானி J/214,பென்னர் செல்வராசா J/214,ராசதுரை யோகேஸ்வரன் J/214,பரஞ்சோதி அருந்தவராசா J/214,சுந்தரம் யோகராசா J/214 தம்பியாம்பிள்ளை தேவஸ்தோதிரம் மரி ஜென்சி J/214,மார்க்கண்டு நகுலேஸ்வரன் J/214,பிரான்சிஸ் எக்ஸ்வியர் ஞானசந்திரன் J/214,லேகநாதன் யமுனாராணி J/214,ஞானப்பிரகாசம் வேதனாயகம் J/214,சுகந்தன் ரஜின்தினிதேவி J/214,செல்லத்துரை சுந்தர் J/214,தம்பிராசா ஜேசவ் J/214,சுதிஸ்வரன் மாலினி J/215,நாகரத்தினம் விக்னராசா J/215,சண்முகலிங்கம் மகாலட்சுமி J/215,செல்வரத்தினம் முஜீவன் J/215,செல்வராசா நிசாந்தன் J/215,தவம் சதிஸ்வரன் J/215,ஐயம்பிள்ளை விஜயகுமார் J/215,பொன்னுத்துரை பெனாட் J/215,சின்னராசா பிரேமரஞ்சன் J/215,சொர்ணலிங்கம் மதியழகன் J/215,சின்னத்துரை சண்முகநாதன் J/215,சிவலிங்கம் சற்குணதாஸ் J/215,ஜெயராசா சந்திரபவானி J/215,பாலசுப்பிரமணியம் சதீஸ்வரன் J/216,ராசிக்குமார் சுயாத்தா J/218,நாகலிங்கம் அருள்ராஜ் J/218,பாலன் ருவேந்திரன் J/218,நல்லையா விமலகாந்தன் J/218,நல்லையா லட்சுமிகாந்தன் J/218,ஐயாத்துரை பத்மதாஸ் J/218,பிரான்சிஸ் ஜெனிஸ்டன் J/218,வெள்ளையன் குணசேகரன் J/218,தவரத்தினராசா கிருபாகரன் J/218,தர்மரத்தினம் காந்திமதி J/219,தியாகராசா ஜெயதீபன் J/219,கதிர்வேலு பிரதீபன் J/219,துரைராசா ஜெயரூபன் J/219,தேவராஜா ரஜீவ்காந்த் J/219,பென்னுத்துரை கமல்ராஜ் J/219, கந்தையா சத்தியரூபன் J/219,செல்வராசா அருள்ராஜ் J/219,தங்கராசா சாந்தகுமார் J/219,தம்பிக்குட்டி யோகரத்தினம் J/219,குணசேகரம் கணேசநாதம் J/219,தர்மலிங்கம் கஜேந்திரா J/219,மனோகரன் கிரிதரன் J/219,பாலசுப்பிரமணியம் சுபாஸ்கரன் J/219,பரராஜசிங்கம் பரராஜசேகரம் J/219, செல்லையா குகனேசன் J/220,சின்னயன் பாலு J/220,முரகாநன்தன் திவாகரன் J/220,குணசேகரம் கசிதன் J/220,பண்டாரி தவராசா J/220,பெரியசாமி ராசேந்திரகுமார் J/220,பத்மநாதன் ஜெயகுமார் J/220,குலசிங்கம் தயாலசீலன் J/220,இடியாமின் அனுசா J/220,கதிரவேலு கன்னன் J/220,விஜயரத்தினம் ஜிசூபன் J/220,கார்த்திகேசு சிவகுமார் J/220,பாக்கியநாதர் ஜோம்ஸ் டேவிட் ஜேசுராசா J/221,சின்னத்துரை புதபிள்ளை J/221,சின்னத்துரை பாலசுந்தரம் J/221

தியாகராசா திபாகரன் J/222,வில்வராசா ஜெயதீபன் J/222,மிக்கல் ரெஜினோல்ட் J/222,மரியதாஸ் பியஸ் டிசோக்குமார் J/222,பெனி பீற்றர் J/222,முரகன் சண்முகராசா J/222,மகேந்திரன் விவிதாஸ் J/224,ஜெகதீஸ்வரன் பிரேமகலா J/224,வேலுப்பிள்ளை நந்தகோபாலன் J/224,நாகேந்திரம் ரஜித்தா J/225,கதிரேசன் சாந்தி J/225,யோகநாதன் மகிழ்ராசா J/225,சுப்பிரமணியம் தர்மராசா J/225,சம்மிக்கேள் அன்ரன் தேவராசாJ/225,செரூபன் சுதர்சினி J/225,சிங்கராசா தசிக்குமார் J/225,வீரசிங்கம் ரதிமோகன் J/225,செல்வராசா செல்வரூபன் J/225,பொன்னுத்துரை விஜயரத்தினம் J/225,கதிரன் வரதராசன் J/225,பொன்னுத்தரை பிரபாகரன் J/225,சின்னத்தரை புஸ்பராசா J/225,சானாய் கந்தசாமி J/225,ராஜேஸ்வரன் லிங்கமூர்த்தி J/225,ரம்மியா மோகன்ராஜ் J/225,ஐயாக்குட்டி பரதாகரன் J/225,சாந்தகாசன் ராதா J/226,ராசேந்திரம் டினேஸ்காந்த் J/226,கதிரவேலு வசந்தகுமார் J/226,சுப்பன் விஜயகுமார் J/226,கதிரைமலை சத்தியதீபன் J/226,சுப்பிரமணியம் கரன் J/226 சய்மன்மிக்கல் வினோதராசா J/226,தனிகாசலம் பாலரஞ்சன் J/226,நாகேஸ்வரன் சாந்தினிதேவி J/227,தர்மகுலசிங்கம் நற்குணதேவி J/228, சிவசுர்ரிரமணியம் சிவகாந்தன் J/228,தர்மகுலசிங்கம் விஜேந்தன் J/229

சிவகுமரன் தவநாயகி J/229,திருசெல்வம் சசிகரன் J/230,சத்தியசீலன் ஆமின் J/230,நடராசா நவநீதன் J/230,சுபோதன் வனித்தா J/230,சேனாதிராசா தர்மகுலசிங்கம் J/230,அருமைரத்தினம் சந்திரகாந்த் J/230,நடரர்சா ஜெகதீஸ்வரன் நிரஞ்சினி J/232,சிவசுர்ரிரமணியம் கேமலதா J/233,கனகர் கந்தசாமி J/233,நன்னியர் நடேசு J/233,சேகர் சுபிதா J/234,வடிவேலு நிதிதியானந்தம் J/235,கணபதி தவராசா கருனாம்பிகை J/235,கதிர்வேலு ரவீந்திரராஜா J/235,செல்வம் வாசுகி J/235,சண்முகநாதன் செல்வகுமார் J/236

நாகமுத்து விக்னேஸ்வரன் J/239,கணாதி செல்லத்துரை J/239,சீனியன் குணபாலன் J/240,கந்தையா சந்திரன் J/241,ராசரத்தினம் சிவகுமரன் J/241,ராசய்யா சிறிகாந்தன் J/241,கந்தையா கிருஸ்ணபவன் J/241,சிவராசா சிவகரன் J/242,தங்கவேல் செல்வராஜா J/242,பொன்னம்பலம் கிருஸ்ணகுமார் J/242,ர்வனேஸ்வரன் சுகந்தி J/242,நடராசா பிருஸ்ணமூர்த்தி J/244,செல்லத்தரை கண்ணன் J/245,பொன்னன் புவனேஸ்வரி J/246,வேலாயுதம் சந்திரகுகன் J/246,தங்கராசா செல்வசோதி J/246,முரகன் ரதனி J/246,செல்வரதாசா ராணி J/246,மயிலன் குணலிங்கம் J/246,ரத்தினம் சிறிஸ்வரன் J/246,ஐயாத்துரை பாலசந்திரன் செல்வராணி J/246,ராமநாதன் கிருஸ்ணகுமார் J/246,அமிர்தலிங்கம் அமலநாதன் J/247,ஜெகநாதன் ர்ராஜேஸ்வரி J/249,கந்தசாமி புஸ்பராசா J/249,கிறிஸ்தோபிள்ளை தரீசியஸ் J/249,வேலுப்பிள்ளை செல்வராசா J/250,சிங்கராசா செல்வராசா J/250,செல்லத்துரை அழகுராசா J/250,சோமு நாகேஸ்வரா J/250,முருகேசு ராஜ் J/251,சிவானந்தலிங்கம் அம்பிகாதேவி J/251,லங்கநாதன் கிருபாகரன் J/252,புஸ்பராசா அனுலா J/252,பாலசிங்கம் அஜந்தன்ஃசுமதி J/252,பொனிபஸ் அல்பிரட் றொபேட் J/254,ஆரோக்கியநாதர் அருட்கதிர்செல்வன் J/254,பேதுருபிள்ளை மேரிஅசிலீன் J/254,மதுரநாயகம் மேரிஅசிலீன் J/254, தீதுஸ் அகஞீன் துரைராசா J/254,டேவிட் அல்பேட் J/254,சிமியோன்ராஜ் மேரிமாக்றீற் J/254,செபஸ்ரியன் இருதயதாஸ் J/254,பிரான்ஸிஸ் மேரிகிறேஸ் செல்வராணி J/254 அன்ரன்பவல் மேரி ஜசிந்தா J/254 பெனடிக்ற் ஜீவதாஸ் J/254

### ஆறு லட்சம் ரூபா வீடு

சிவஞானராசா சிகாமணி J/212,,நாகேந்திரசர்மா சிவகாமி J/213,பாலசுர்ரிரமணியம் சிவஸ்கரன் J/215,முத்துவெல்சாமி சகாதேவன் J/215,கந்தையா அன்னம்மா J/220,சிதம்பரநாதன் இந்திராணி J/220,ஆறுமுகம் சிறிதரன் J/220,செல்லையா ரவீந்திரன் J/222,அன்டன் ஜெயராசா மேரி ரீற்றா J/222,நாகலிங்கம் சற்குணநாதன் J/223,சேமகுமார் ஜெயவதனா J/224,செல்லத்துரை தவராசா J/225,குழந்தைவேல் கேபாலகிருஸ்னன் J/227,நிரூசன் அகிலா J/227,முருகையா ராசமணி J/228,அன்தேனிப்பிள்ளை மேரி அல்பேன்ஸ் J/228,பாலசிங்கம் சறேஜினஜிதேவி J/228,ரட்ணம் லட்சுமி J/228,செல்வராசா செல்வராணி J/228,நாகன் செல்வரட்ணம் J/228,திருநாவுக்கரசு ராசேன்திரம் J/228,ராசரட்ணம் ரவிக்குமார் J/228,நாகேந்திரன் அருமைரட்ணம் J/230

தம்பையா கனகரட்ணம் J/231,மல்லிகா வெள்ளிமயில் J/233,ராசேந்திரம் செல்வராணி J/233,அப்புத்துரை பாக்கியநாதன் J/239,அப்பபுத்துரை சத்தியநாதன் J/239,தங்கவேலாயுதம் கனகம்மா J/239,முத்துத்தம்பி தருமமூர்த்தி J/239,யோகநாதன் யேகேஸ்வரி J/239,சின்னத்துரை தனபாலசிங்கம் J/239,சுகந்தன் சாரதா J/244,முத்தலி மாசிலாமணி J/246

பொன்னன் கிருபாமூர்த்தி J/246,பிள்ளையான் பிருந்தா J/246,ராசா சக்திவேல் J/246,சின்னரத்தினம் மகாலிங்கம் J/249,குணலிங்கம் சிறிராணி J/249,வேதனாயகம் லில்லிமலர் J/249,லீனப்பு ஜோன் அமிர்தநாயகம் J/249,மேகன் அழகராணி J/251,தியகராசா ரஞ்சிதமலர் J/250,அருந்தவராசா டில்மா J/250,நல்லையா கோபாலசிங்கம் J/250,ராசு சசிகரன் J/250,ரன்ஞன் சாந்தினிதேவி J/253,யோகேந்திரம் திலகவதி J/253.

## வேலணை பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

சூசைபிள்ளை பற்றிக் செல்வராசா J/09,மடுதின் ஆரோக்கியநாதர் J/09, லியோ துரைசிங்கம் J/09,விஜயசேகரம் சந்திரவதனா J/10,பரமகுருநாதன் ஜெயசந்திரன் J/10,இராசலிங்கம் சிறிகந்தராசா J/10,கறிஸ்ரின் அந்தோனிதாஸ் J/10,ரவீந்திரன் இராசரூபி J/11,சந்திரகாந்தன் ஜெயகலா J/11,பொன்னன் செல்வரட்ணம் J/13,திலகராசா சாரதாதேவி J/14,சோகேஸ்வரன் தயாளினி J/14,சின்னத்துரை அருமைத்துரை j/14,கோபாலன் விஜயராசா J/15,நாகேஸ்வரன் சுந்தரபவன் J/15,ஆறுமுகம் சிறிதரன் J/16,அமிர்தலிங்கம் சுகிர்தராஜ் J/16,கந்தசாமி மங்களம் J/17,ெந்தோனிப்பிள்ளை பெனடிக்ற் J/17,ஆறுமுகம் சோமசேகரன் J/17,இரசேந்திரம் தில்லைநாயகி J/17,மாசிலன் அல்போன்ஸ் J/17,வேலு சக்திவேல் J/18,நாகேசு சண்முகராசா J/23,சௌந்தரராஜன் பிரதீபன் J/23, சவரிமுத்து அருந்தவம் J/26,பிரான்ஸிஸ் சேவியர் அசோகுமாரி J/26,செபமாலை அன்ரன் செபராசா J/26,ஜெயகுமார் மேரி நிசாந்தினி J/26,நிகொலஸ் அல்பேட் J/26,பிரான்ஸிஸ் சேவியர் அசோகுமாரி J/26, சவரிமுத்து திருத்துஸ்போல் J/26,கிறுஸ்[illegible] J/26,வைரவன் வரதராசன் J/26,தங்கவேல் ரட்ணசாமி J/27,[illegible] J/27,கனகசபை சிறிதரன் J/27,கந்தையா சண்முகலிங்கம் J/28, இராஜேஸ்வரன் ரேணுகா J/28,ஹமீது ஜெஜுப் J/29,சுதாகரன் சிவதர்சினி J/29,கதிரேசு மார்க்கண்டு J/29,இம்மானுவல் பேதுரப்பிள்ளை J/33,ஜயம்பிள்ளை சற்குணராஜா J/33,சின்னத்துரை சிவலிங்கம் J/33,கனகேஸ்வரன் விமலேஸ்வரி J/36,சோமசுந்தரம் வடிவேலு J/19,உதயகுமரன் மகேஸ்வரி J/29,சசிகுமார் பவளராணி J/30,போணலிஸ் எட்டே பெர்ணான்டோ J/31,பேரம்பலம் பேரின்பராணி J/21,வேலாயுதம் இராசரட்ணம் J/20,விநாயகமூர்த்தி சுபாஸ்கரமூர்த்தி J/30,

### ஆறு லட்சம் ரூபா வீடு

பெரியதம்பி இராசேந்திரம் J/07,,பரமானந்தம் லோகேஷ்வரன் பிரகதாம்பாள் J/08,பத்மநாதன் மகாலக்ஸ்மி J/08,திருவருட்செல்வன் சிந்துஜா J/08, மரியநாயகம் றொசாறியோ J/10,அமிர்தசிறி வவனா J/11,ராஜு செல்வநந்தி J/14,சுரெந்திரன் அருட்செல்வி J/14,தங்கராசா செந்தமிழ்செல்வி J/17,இளையதம்பி தங்கவெல் J/18,சர்வானந்தம் புஸ்பலலிதா J/20,பாஸ்கரன் தவமணிதேவி J/21,பெனடிக்ற் பொனிக்கம்மா J/26,செபமாலை விமலா J/26

இராஜேஸ்வரன் சாரதா J/26,அரியதாசன் மேரிஜோன் J/26,பாலேந்திரன் [illegible] J/27,சிங்கராசா சத்தியமலர் J/33,கார்த்திகேசு சபாரட்ணம் J/08 [illegible] பரமலிங்கம் J/11,புலிக்குட்டி இராசரட்ணம் J/14,முருகேசு முத்துலிங்கம் J/18.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகளின் மீது சீனா காரசார விமர்சனம்

## மனித உரிமைகள் மீது அவை பாசாங்குத்தனம் என்றும் சாடல்

**கொழும்பு, ஜூலை 12**

**விரும்பாத நாடுகளைத் தாக்க புவிசார் அரசியல் கருவியாக மனித உரிமைகள் விவகாரத்தை மேற்கு நாடுகள் பயன்படுத்துகின்றன. இது மனித உரிமைகள் மீதான பாசாங்குத்தனம் என மேற்கு நாடுகளை கடுமையாக சாடியுள்ளது சீனா.**

இந்த விவகாரத்தில் சீனாவுடன் இணைந்து பக்கப்பாட்டு பாடியுள்ளது இலங்கை என்றும் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது அமர்வின் இணையவழி கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், இராஜதந்திரிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அறிஞர்கள் கலந்துகொண்டனர் என்று சீனாவின் 'குளோபல் டைம்ஸ்'செய்தி வெளியிட்டுள்ளது.

'மேற்கில் மனித உரிமைகள், சர்வதேச கண்காணிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பதிலளிக்காமை'என்ற கருப்பொருளிலான இணையவழி கலந்துரையாடலை சீனா, பெலாரஸ், ரஷ்யா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் இணைந்து ஏற்பாடுசெய்தன. அதில் 40க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். "ஒவ்வொரு நாடும் அதன் சொந்த மக்களின் நலன்களில் கவனம் செலுத்துகின்றன. ஒவ்வொரு நாடும் மனித உரிமைகளின் உலகளாவிய கொள்கைகளை தங்கள் நாடுகளில் உள்ள யதார்த்தத்துடன் இணைத்து அவர்களுக்கு ஏற்ற அமைப்பை உருவாக்க வேண்டும்" என ஜெனிவாவுக்கான சீனத் தூதர் ஜியாங் துவான் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

### சாசன மீறல்

"அனைத்து நாடுகளும் மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடி ஒத்துழைத்து செயற்பட வேண்டும். மற்றவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச வற்புறுத்தல் நடவடிக்கைகளை சுமத்தவும், அழுத்த நடவடிக்கையாகவும் மனித உரிமைகளை பயன்படுத்தக்கூடாது.

சில மேற்கத்தேய நாடுகளில் மனித உரிமை மீறல்கள் கடுமையானவை, அவர்கள் பழங்குடி மக்களுக்கு எதிராக குற்றங்களைச் செய்துள்ளனர் மற்றும் இராணுவத் தலையீடுகள் மூலம் பிற நாடுகளில் அப்பாவி பொதுமக்களைக் கொன்றனர். அந்த நாடுகள் மனந்திருந்துவதற்கு பதிலாக, மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் அப்பட்டமாக தலையிட அரசியல் நோக்கங்களுக்காக பொய் சொல்கின்றன, இந்த நடத்தைகள் ஐ.நா. சாசனத்தையும் கொள்கைகளையும் கடுமையாக மீறியுள்ளன. பிற நாடுகளில் மனித உரிமைகளை பெரிதும் சேதப்படுத்தியுள்ளன" என்று மேலும் தெரிவித்தார்.

### கண்மூடித்தனமான செயற்பாடு

பெலாரஸ், ரஷ்யா, வெனிசுலா, ஈரான், வட கொரியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் தூதர்கள் மற்றும் இராஜதந்திரிகளும் உரை நிகழ்த்தினர். மேற்கத்தேய நாடுகளில் குறிப்பாக புலம் பெயர்ந்தோர், பழங்குடி மக்கள் மற்றும் பிறசிறுபான்மையினருக்கு எதிரான கடுமையான மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தினர். பலதரப்பு மனித உரிமை அமைப்புகள் நீண்ட காலமாக மேற்கு நாடுகளால் க்ட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பிரச்சினைகள் குறித்து கண்மூடித்தனமாக செயற்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

### மனித உரிமைகள் சலுகை அல்ல

சில மேற்கத்தேய நாடுகள் தங்களை 'வளர்ந்த' மற்றும் 'ஜனநாயக' நாடுகள் என்று விற்கின்றன. மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து மற்றவர்களுக்கு சொற்பொழிவு செய்வதற்கும், அவர்கள் விரும்பாத நாடுகளை விமர்சிப்பதற்கும் ஆர்வமாக உள்ளன என சில நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த நாடுகள் 'மனித உரிமைகளை' தங்கள் 'சலுகை' என்று கருதுகின்றன, மேலும் மனித உரிமைகளை அவர்களின் மேற்கத்தேய மதிப்புகளால் மட்டுமே தீர்மானிக்க முடியும் என்று நினைக்கிறார்கள். இது காலனித்துவ மனநிலையை வெளிப்படுத்துவதில் மட்டுமே வெற்றி பெறுகிறது. மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை மீறுகிறது, சர்வதேச மனித உரிமைகள் காரணத்துக்காக பேரழிவு தரும் முடிவுகளைக் கொண்டுவரும் என்றும் தெரிவித்தனர்.

சீனா, பெலாரஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் சார்பில் கலந்து கொண்டவர்கள், இன பாகுபாடு குறித்து தங்கள் கவலைகளை வெளிப்படுத்தினர். பல மேற்கத்தேய நாடுகளால் பெருமை பேசும் ஜனநாயக அமைப்பு உயரடுக்கினருக்கான ஒரு அமைப்பு என்று தெரிவித்தனர். அரசுகள் பொதுவான மக்களின் உரிமைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. மேற்கத்தேய முறையை நகலெடுக்க முடிவுசெய்வதற்குமுன் வளரும் நாடுகள் கவனமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தனர். (த-4)

---

# விலைக்கொள்கை குறைபாடுகளை தீர்ப்பதற்கு அரசு முன்வரவேண்டும்

## வலியுறுத்துகிறார் கரு ஜயசூரிய



கொழும்பு, ஜூலை 12

நாடு முழுவதும் உணவுப்பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும்போது, வர்த்தகர்கள் பொருள்களைப் பதுக்கிவைக்கின்றமையே அதற்குக் காரணம் என்று ஏனைய தரப்புக்களின் மீது பழி சுமத்துவதை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். பொருள்களின் விலைக்கொள்கைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திசெய்து, பிரச்சினை களுக்கு உடனடித்தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியிருக்கிறார். அண்மைக் காலத்தில் பொருள்களின் விலையேற்றம் முக்கியமான பிரச்சினையாக மாறியிருக்கும் பின்னணியில், இதுகுறித்து கரு ஜயசூரிய அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சுகாதார நெருக்கடி நிலையொன்று காணப்படும் சூழ்நிலையில், சுகாதாரப் பணியாளர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு மேற்கொண்ட தீர்மானம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். அதேவேளை, சுகாதாரப் பணியாளர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதற்கும் முன்வர வேண்டும்.

இவற்றுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, ஏனைய தரப்புக்கள் மீது பழிசுமத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கொள்கைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திசெய்து பிரச்சினைகளை உரியவாறு கையாளவேண்டும் என்று அவர் மேலும் பதிவிட்டுள்ளார். (த-இ)

---

## ஊடகங்களை அச்சுறுத்திய

# பெண் பொலிஸ் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12

ஊடகங்களை அச்சுறுத்திய பெண் பொலிஸ் அலுவலர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 8ஆம் திகதி கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் குறித்த சட்டவரைவுக்கு எதிர்ப்பு வெளியிட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை பெண் பொலிஸ் அலுவலர் ஒருவர் அச்சுறுத்தியிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் இலத்திரனியல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

குறித்த பெண் பொலிஸ் அலுவலர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அந்த பெண் பொலிஸ் அலுவலரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கமராவை தாக்கிய குறித்த பெண் அலுவலர், பொலிஸ் வாகனத்தில் ஏறி தப்பிச்செல்லும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

---

# சிறுமி துஷ்பிரயோகம்: நால்வருக்கு பிணை

கொழும்பு, ஜூலை 12

இணையத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்ட 15 வயது சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இருதய மருத்துவர், மிகிந்தலை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் மற்றும் இரத்தினக்கல் தொழிலதிபர்கள் இருவர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில், சந்தேகநபர்களின் சட்டத்தரணிகள் முன்வைத்த கோரிக்கையை ஆராய்ந்த நீதிவான் லோச்சனி அபேவிக்கிர, விசாரணை நடவடிக்கை நிறைவடைந்த பின்னரும் பிரதிவாதிகளை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருப்பது நியாயமற்றது என தெரிவித்து பிணையில் விடுவித்துள்ளார். (த-இ)

---

## பேர்ள் கப்பலின்

# உள்நாட்டு முகவர்கள் பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஜூலை 12

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவன உறுப்பினர்கள் எழுவர் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு முகவர் நிறுவனமான சீ கன்சோரிடியம் லங்கா பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் 7உறுப்பினர்களே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 7 பேரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாபயவின் தீர்மானத்தை பசில் மாற்றினார் என்பது பொய்

### கூறுகின்றது அரசுத் தரப்பு

கொழும்பு, ஜூலை 12

பசுமையான சமூக பொருளாதார மாதிரியை கட்டியெழுப்பும் நோக்கில் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகள், இறக்குமதி செய்வதை தடைசெய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்த தீர்மானமானது, புதிய நிதியமைச்சர் பசில் ராஜபக்சவால் மாற்றப்பட்டுள்ளது என சில இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக பரப்பப்படுகின்ற செய்திகளில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இரசாயன உரப் பாவனைக்கு பதிலாக சேதன உரங்களைப் பயன்படுத்தி வேளாண்மையில் ஈடுபடுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கான எவ்வித எண்ணமும் அரசிடம் இல்லை.

பசில் ராஜபக்ச புதிய நிதியமைச்சர் நியமனம் பெற்றதன் பின்னர் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அரசின் தற்போதைய மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார். அங்கு பல்வேறு கருத்துக்கள், வாதங்கள் மற்றும் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன. அவை அனைத்தையும் சரிசமமாக மதிப்பாய்வுசெய்து மிகவும் சரியான செயன்முறையை திட்டமிடுவதற்கு தேவையான 5 துணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. பசுமையான பொருளாதாரத்தை உருவாக்கும் கொள்கையை மாற்றுவதற்கு இந்த கலந்துரையாடலின் போது எவ்வித யோசனையும் முன்வைக்கப்படவில்லை- என்று குறிப்பிட்டுள்ளது. (து-இ)

## அரசமைப்புக்கு புறம்பாக பணிப்பாளர் கட்டுப்பாடுகளை அறிவிக்க முடியாது

### ஐ.தே.க. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 12**

**தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உள்ளது. இருப்பினும் நாட்டின் அரசமைப்புக்கு அப்பாற்பட்ட வகையிலான சட்டங்களை விதிப்பதற்கோ அல்லது தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கோ அவருக்கு அதிகாரம் இல்லை.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒரு கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு பொலிஸாரால் வெளியிடப்பட்ட பணிப்புரையானது அரசமைப்பின் ஊடாக நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதாகவே அமைந்துள்ளது.

அந்தப் பணிப்புரையைப் பயன்படுத்தி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை பொலிஸார் கைதுசெய்யும் நிலையொன்று உருவாகியிருக்கிறது.

தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி மிகவும் நெருக்கமான தொடர்புகளைப் பேணியவர்களை மாத்திரமே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டவர்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களோ அல்லது அவர்கள் போராட்டத்தின் போது நெருக்கமாகச் செயற்பட்டமையோ கண்டறியப்படவில்லை. அவ்வாறிருக்கையிலேயே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்ட குழுவினரைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வாறு செயற்படும் பொலிஸார் தயானந்த லியனகேவின் வழக்கை நினைவில்கொள்ள வேண்டும். அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, எந்தவொரு தரப்பினரால் எத்தகைய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும் அது சட்டத்துக்கமைவானதா என்பதைப் பொலிஸார் மனதிலிருத்திச் செயற்பட வேண்டும் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது- என்றார். (து-இ)

## மஹிந்த மீதான விசுவாசம் கோத்தா, பஸில் பக்கம் மாறியதா?

### கேள்வியெழுப்புகிறார் ஹேஷா விதானகே

### அமெ. சான்றிதழ் பஸில் தருவார் என்றும் கிண்டல்

கொழும்பு, ஜூலை 12

மஹிந்த ராஜபக்சவே போரை முடிவுக்கு கொண்டுவந்தார். அவரே நாட்டின் எதிர்காலம் என்று கூறிவந்த ஆளுந்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இப்போது கோத்தாபய ராஜபக்சவே போரை முடிவுக்கு கொண்டுவந்தார் என்றும் பஸில் ராஜபக்சவால் மாத்திரமே, நாட்டின் பொருளாதாரத்தை, சீரமைக்கமுடியும் என்றும் கூறுகின்றார்கள். அவ்வாறெனின், மஹிந்த ராஜபக்ச நாட்டுக்கு என்ன செய்தார்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே கேள்வியெழுப்பியுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொடுத்த மஹிந்த ராஜபக்ச நாட்டின் தந்தையானதைப்போன்று, அமெரிக்காவின் பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் நிலையிலிருக்கும் பஸில் ராஜபக்ச 'நாட்டின் தந்தையாக' மாறுவது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டத்தின் ஆட்சி முழுமையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டு, ஆட்சியாளர்களுக்கு ஏற்றவகையில் அதனைக் கையாளக்கூடிய நிலையொன்று தோற்றம்பெற்றுள்ளமையை வெளிப்படையாகவே அவதானிக்கமுடிகின்றது. பொலிஸாரைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தல் சட்டத்தை அரசு தமக்கேற்றவாறு பயன்படுத்த முனைவதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஊடாக அரசியல் செயற்பாட்டாளர்கள், அரசின் செயற்பாடுகள் தொடர்பில் தமது அபிப்பிராயத்தை வெளியிடுபவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் கட்டுப்படுத்துவதற்கும் அடக்குவதற்கும் அவசியமான நடவடிக்கையை அரசு முன்னெடுத்திருக்கின்றது. நாட்டின் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஜோசப் ஸ்ராலின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்தச் சச்சட்டத்தை அரசு ஒவ்வொரு தரப்பினருக்கும் வெவ்வேறு விதத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. நாடாளுமன்றத்தில் வைத்து உரிய விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் இதுகுறித்து கேள்வி எழுப்பப்பட்டபோதிலும், அவரிடம் இதற்கான பதில் இல்லை. இதற்கு முற்றிலும் தொடர்பற்ற விடயங்க ளையே அவர் கூறுகின்றார்.

பொதுமக்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் விமர்சனங்களை வெளியிடுவதற்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னிற்பதற்கும் கடந்த அரசில் வழங்கப்பட்டிருந்த சுதந்திரத்தைத் தற்போதைய அரசு முழுமையாகப் பறிக்கமுற்படுகின்றது. நாட்டின் ஜனநாயகத்தையும் மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் அரசுசெயற்பட வேண்டும். எனவே தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்தி, தமக்கு சவாலாக இருக்கின்ற தரப்பினரை அடக்குவதற்கும் தனிமைப்படுத்தலுக்காக அவர்களைத் தூரப்பிரதேசங்களுக்கு அழைத்துச்செல்வதையும் அரசு உடனடியாக நிறுத்தவேண்டும்.

மகாசங்க தேரர்களின் ஆசியுடனும் ஆதரவுடனுமே இந்த அரசு ஆட்சிபீடமேறியது. எமது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு கோத்தாபய ராஜபக்சவைப் போன்ற ஆட்சியாளரே அவசியம் என்று மகாசங்க தேரர்கள் கூறினார்கள். ஆனால் இன்று தேரர்களின் கால்களை பிடித்துத் தூக்கிச்செல்லும் நிலைக்கு அரசு கீழிறங்கியிருக்கின்றது. தேரர்களை அவ்வாறு மரியாதையின்றி நடத்தியமைக்குக் காரணம் என்னவென்று மகாசங்கத்துக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

அரசு தற்போது முன்னெடுத்துவரும் செயற்பாடுகளைப் பார்க்கும்போது, நாம் ஒரேயொரு விடயம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கைவிடுக்க விரும்புகின்றோம். பஸில் ராஜபக்ச நாட்டுமக்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்புக்கூறாமல், நாட்டின் பொருளாதாரத்தைத் தற்போதுள்ள நிலையை விடவும் மோசமாக்கி, இறுதியில் நாட்டைவிட்டுச் செல்லும்போது யாராலும் எந்தவொரு கேள்வியும் எழுப்பமுடியாத நிலைமையே காணப்படும் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவேண்டும்- என்று குறிப்பிட்டார். (து-இ)



## பஸில் வருகையால் 20 பேருக்கு ஆப்பு?

கொழும்பு,ஜூலை 12

அமைச்சரவை மாற்றத்தின் போது பிரதான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 20 பேர் ஓரங்கட்டப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய சந்தர்ப்பத்தை கைநழுவவிட்டு, மக்கள் மத்தியில் எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொண்ட அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களே இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுக்குப் பதிலாக புது முகங்களை களமிறக்க நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச யோசனை முன்மொழிந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா அரசுக்கு எதிராக ஆசிரியர்கள் போர்க்கொடி

## இணையவழி கற்பித்தலில் விலகல்

**கொழும்பு,ஜூலை 12**

**இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து இன்று திங்கட்கிழமை முதல் ஆசிரியர்கள் விலகவுள்ளனர் என்று ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் நீதிமன்ற உத்தரவைக் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதற்குத் தீர்வு வழங்கும் வரை, இணைய வழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகியிருப்போம் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

(ஒ.4)

# பாடசாலை மாணவிகளுக்கு தொலைபேசியூடாக மிரட்டல்

## குடும்பஸ்தர் கைது



கொழும்பு,ஜூலை 12

பாடசாலை மாணவிகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு தவறான ஒளிப்படங்களை அனுப்பி, மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொரோனா சூழ்நிலையில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், இணையவழி மூலமே அனைத்து கல்விச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இணையவழி கற்றலில் ஈடுபடும் பாடசாலை மாணவிகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு, தவறான ஒளிப்படங்களை இளம் குடும்பஸ்தர் ஒருவர் அனுப்பியுள்ளார்.

அவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தன்னைச் சந்திக்க வருமாறும் மிரட்டியுள்ளார்.

இது தொடர்பில் மாணவி ஒருவர் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டையடுத்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பிட்டிகல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(ஒ.4)

# வட மாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு,ஜூலை 12

வடக்கு மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யும். எனினும் மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலை காரணமாக, நாட்டைச் சூழவுள்ள ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் அவ்வப்போது பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம், காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ.4)

# அரபு நாடுகளிடையே மோதல் எரிபொருள் விலை அதிகரிப்பு?



கொழும்பு,ஜூலை 12

சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளின் இளவரசர்கள் இடையே ஏற்பட்டுள்ள மோதலால், கச்சா எண்ணெய் விலை 6 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதனால் இலங்கையில் எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பெற்றோல் உற்பத்தி அளவு மற்றும் அதன் விலையை மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஒபேக் கூட்டமைப்பு நாடுகளே தீர்மானிக்கின்றன. கொரோனா காரணமாக கச்சா எண்ணெய் உற்பத்தியில் இருந்த தேக்கத்துக்கு முடிவு கட்டி உற்பத்தியை அதிகரிக்க உறுப்பு நாடுகள் விருப்பம் தெரிவித்தன.

ஆனால் மசகு எண்ணெய் உற்பத்தி அளவை 8 மாதங்களுக்குப் பின்னர் அதிகரிக்கலாம் என்று சவூதி அரேபியா யோசனை தெரிவித்திருந்தது. இதனை ஐக்கிய அரபு அமீரகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால் கடந்த வாரம் நடைபெற இருந்த ஒபேக் நாடுகள் கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சவூதி அரேபியா இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் அபுதாபி இளவரசர் முகமது பின் சயித் இடையே தொழில், தூதரக உறவில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

மேலும் இஸ்ரேல் உடன் ஐக்கிய அரபு அமீரகம் தூதரக உறவை ஏற்படுத்திக் கொண்டதும் சவூதி அரேபியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது போன்ற மோதல் போக்கும் மசகு எண்ணெய் உற்பத்தி தேக்கமடையக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ.4)

### ஒரு நாளில் மாத்திரம்

# மின்தடை தொடர்பில் 12,000 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொடக்கம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை வரை வீசிய கடும் காற்று காரணமாக பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சுமார் 12 ஆயிரம் மின் தடை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் தடை காரணமாக சுமார் 4 லட்சத்து 75 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சு விடுத்துள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காலி, மாத்தறை, கிரிபத்கொட, கண்டி, பேராதனை, குளியாப்பிட்டி, குருநாகல், களனி, இரத்மலானை மற்றும் சிலாபம் ஆகிய பிரதேசங்களில் மின் தடை சம்பவங்கள் அதிகமாக பதிவாகியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-இ)

# ஆஸ்திரேலிய விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூலை 12

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலியைச் சேர்ந்த 30 வயதுடைய குஷான் நிரோஷனா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் செலுத்திச் சென்ற கார் பிரதான வீதியிலிருந்து விலகி, அருகிலிருந்த மரத்துடன் மோதி விபத்து நடந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு அவசர சேவைப் பிரிவினர் வரவழைக்கப்பட்டபோதும், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு முன்பே இவர் உயிரிழந்துவிட்டார் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ.4)

# நடுவானில் எரிபொருள் தீர்ந்தது என்பது பொய்

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 12

லண்டனிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம், நடுவானில் எரிபொருள் தீர்ந்ததால் அவசரமாக தரையிறக்கப்பட்டது என்று வெளிவரும் தகவல்களை ஸ்ரீலங்கா விமான சேவைகள் நிறுவனம் நிராகரித்துள்ளது.

அவ்வாறான எந்த சம்பவமும் நிகழவில்லை என்று ஸ்ரீலங்கா விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

லண்டன் ஹீத்ரோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து கடந்த 6ஆம் திகதி இலங்கை திரும்பிய யுஎல் - 504 ரகத்திலான இலங்கை விமான சேவைகள் நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு சொந்தமான விமானம் அவசரமாக இந்தியாவில் தரையிறக்கம் செய்யப்பட்டது என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு கடன்களை செலுத்துவதில் சிக்கலில்லை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 12**

**வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியைப் பொறுப்பேற்று ஆட்சிஅமைத்தவுடன் அரச நிலுவையில் உள்ள கடன் தொகையில் 2020ஆம் ஆண்டுக்கான தொகையை மீளச் செலுத்த முடியாது என்று பரப்புரை செய்யப்பட்டது. ஆனால் அரசு உரிய காலப்பகுதியில் கடன்தொகைகளைச் செலுத்தியிருந்தது. தற்போது, நாணயத்தாள்களை அச்சிட்டதன் காரணத்தால் இந்த ஆண்டின் அடுத்துவரும் காலப்பகுதியில் உள்ள கடன் தொகைகளை செலுத்த முடியாது என்று பரப்புரை செய்யப்படுகின்றது.. ஆனால் அந்தவிதமான நெருக்கடியான நிலைமைகள் எதுவும் காணப்படவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காலத்திலும் நிதி முகாமைத்துவம் முறையாகவே பேணப்பட்டது. அதேபோன்று, தற்போதும் அந்தச் செயற்பாடுகள் அனைத்தும் முறையாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, அரசு உரிய காலப்பகுதியில் கடன் தொகைகளை முறையாகச் செலுத்தும்- என்றார். (த-இ)

# சிறுவர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்!!

வவுனியா,ஜூலை 12

சிறுவர்களின் ஆக்கபூர்வமான எண்ணங்களை மேலும் வினைத்திறனாக்கும் முகமாக வவுனியா மாவட்ட பிரதேச செயலக சிறுவர் கழக சிறார்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சேகரித்த ஆக்கங்களை வைத்து மாவட்ட மட்டத்தில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

அந்தவகையில் 6-10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களிடமிருந்து சித்திரம்,சிறுவர்கதை மற்றும் கல்விசார் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

11-15 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து குறுக்கெழுத்துப்போட்டிக்கான ஆக்கம்,

கவிதை (40 சொற்கள்) சித்திரக்கதை(ஏ4 தாளில் 5 பக்கங்கள்),காட்டூன் சித்திரம் (ஏ 3 தாளில் வரைதல்) போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

16-18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கட்டுரை(250சொற்கள்),புதுக்கவிதை(40 வரிகள்), சிறுகதை (250 சொற்கள்),உலர் சித்திரம்(ஏ3 தாளில் வரையவேண்டும்) குறுக்கெழுத்துப் போட்டிக்கான ஆக்கம் போன்றன கோரப்பட்டுள்ளன.

அனைத்து பிரிவினரும் ஆக்கங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் அல்லது சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.ஜெயகெனடியை (077 538 0422) தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-110)

# தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படுவதை ஏற்கோம்

## அரசுக்கு எதிராக தேரர் போர்க்கொடி

கொழும்பு, ஜூலை 12

பௌத்த புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்பட்டுவருவதை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். தனிமைப்படுத்தல் சட்டத்தையும் மீறி ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்துவோம் என்று

சிங்கள ராவய அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அக்மீமன தயாரத்ன தேரர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிஹிந்தலை பிரதேசத்தில் மதவாச்சி வீதியில் அனுலாதேவியின் சின்னம் வைக்கப்பட்டுள்ள பெறுமதி வாய்ந்த தொல்பொருள் காணி உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த இடம் முற்றாக இடிக்கப்பட்டுள்ளது. முழு நாடும் பயணக் கட்டுப்பாடுகளை எதிர்கொண்ட நிலையில், பௌத்த மக்களின் உரிமைகளாக உள்ள புனித நகரத்தில் ஒன்றாகிய மிஹிந்தலையிலுள்ள பெறுமதியான தொல்பொருள் பிரதேசம், சொத்து இவ்வாறு இடிக்கப்பட்டுள்ளமைக்குப் பின்னால் உள்ள அரச உயர்கரம் யாருடையது?

அரசின் உயர்பீடத்தின் தொடர்பு இதனுடன் இருக்கலாம் என்றே நாங்கள் சந்தேகிக்கின்றோம். பௌத்த உரிமைகளைக் கொண்ட தொல்பொருள் பிரதேசங்களைப் பாதுகாப்போம் என்று தெரிவித்து ஆட்சிக்கு வந்தவர்கள், இவ்வாறு தான்தோன்றித்தனமாக செயற்படுவதை எதிர்ப்போம்- என்றார். (ஒ.4)

# அமைச்சரவை மாற்றத்தால் சு.கவில் சிலருக்கு அதிர்ஷ்டம்

கொழும்பு,ஜூலை 12

அமைச்சரவை மாற்றத்தின்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மேலும் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைவாக அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் வகித்து வரும் அமைச்சுகளில் சில துறைகள் பிரிக்கப்பட்டு, புதிய அமைச்சுக்கள் உருவாக்கப்படவுள்ளன. அந்த அமைச்சுக்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

பஸில் ராஜபக்ச நிதியமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பொருளாதார இலக்குகளை துரிதமாக அடையும் நோக்கில் அமைச்சரவையில் புதிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கைக்கு அமைவாக, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அமைச்சுப் பொறுப்புகளை புதிய அமைச்சரவை திருத்தத்தின்போது வழங்குவது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

புதிய அமைச்சரவை மாற்றத்தின்போது சுகாதாரம், பொலிஸ், தொழில் மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதனால் இளம் அமைச்சர்கள் பலர் அமைச்சரவைக்குள் நுழைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# அராஜகமான ஆட்சியை முன்னெடுக்க வேண்டாம்

## மற்றொரு தேரரும் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 12

அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் நியாயமான போராட்டங்களைத் தடுக்கும், அரசின் செயற்பாடுகளை ஏற்க முடியாது. அமைதியான முறையில் ஆட்சி செய்ய முடியாவிடின், பதவி விலகுமாறு கோத்தாபய தலைமையிலான அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இவ்வாறு தேவால்ஹிந்த அஜித தேரர் முகநூலில் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களின் நியாயமான போராட்டங்களைத் தடுப்பதால், அதற்கான இழப்பீட்டை எதிர்காலத்தில் அரசு செலுத்த வேண்டியிருக்கும்.

மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கோத்தாபயவுக்கு எதிரானது மட்டும் அல்ல. வரலாற்றை எடுத்துக் கொண்டால் அனைத்து நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. ஆர்பாட்டங்களின்போது செயற்படும் விதம் உள்ளது. இவ்வாறு செயற்படுவதால் பெரும் பிரச்சினை ஏற்படும். வரலாற்றில் நடந்த குருதிக் கலவரங்களுக்கு மீண்டும் இடமளிக்க வேண்டாம் என்று ஆட்சியாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (ஒ.4)

# தனிமைப்படுத்தலில் இருந்து கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஜூலை 12

கொத்தலாவ சட்டத்தை உடன் கிழித்தெறி என்று தெரிவித்து தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கல்வியை இராணுவ மயப்படுத்த வேண்டாம் என்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுவர்கள் முல்லைத்தீவு கேப்பாபிலவு கொரோனாத் தடுப்புமையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மற்றும் பௌத்த துறவிகள் இருவர் உள்ளிட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அங்கிருந்தவாறும் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். (ப-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ், இராணுவக் காவலரண் கொக்காவிலிலேயே வேண்டும்

கிளிநொச்சி, ஜூலை 12

**மணல் அகழ்வைத் தடுப்பதற்கான பொலிஸ், இராணுவக் காவலரண் தவறான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என புத்துவெட்டுவான் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த பத்தாண்டுகளாக ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் மற்றும் பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் தொடர்கின்ற மணல் அகழ்வைத் தடுப்பதற்கு கொக்காவில் ரயில் வீதிக்கருகில் பொலிஸ், இராணுவக் காவலரண் அமைக்கப்பட வேண்டும் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது பழையமுறிகண்டிச் சந்தியில் பொலிஸ், இராணுவக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. இது தவறான இடத்தில் அமைந்துள்ளது. கொக்காவில் ரயில் வீதிக்கருகில் குறித்த காவலரண் அமையுமானால் மூன்று கிராமங்களின் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியும். தற்போது புத்துவெட்டு வானில் இருந்து மணல் வெளியிடங்களுக்குச் செல்கின்றது. இதனைத் தடுப்பதற்கு கொக்காவில் ரயில் வீதிக்கருகில் பொலிஸ், இராணுவக் காவலரண் அமைவதன் மூலம் மணல் மற்றும் மரக்கடத்தல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மணல், மரக்கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பயனற்ற நிலையிலேயே கொக்காவில் பகுதியில் ரயில் வீதிக்கருகில் பொலிஸ், இராணுவ காவலரண் அமைய வேண்டும் என நாம் கோருகின்றோம் - என்றனர். (ப-13)

# கடன் வழங்கல் வீதத்தை மட்டுப்படுத்த தீர்மானம்

கொழும்பு,ஜூலை 12

மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஆகியவற்றை, முறையே 4.50 வீதம் மற்றும் 5.50 வீதம் என்ற தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேரண்ட பொருளாதார நிலைமைகளையும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் கவனமாகப் பரிசீலித்ததன் பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் இன்னமும் வெளியிடப்படாத போதிலும், பொருளாதாரத்தின் பல்வேறு முக்கிய துறைகளுக்கான குறிகாட்டிகள் காலாண்டில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட வலுவானதொரு மீட்சியைக் காண்பிக்கின்றன.

கொரோனா பரவலின் முதலாவது அலை மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் 2021 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டின் போதான மீட்சியை ஓரளவுக்கு நலிவடையச் செய்தன.

இருப்பினும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி வழங்கல் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீக்குதல் ஆகியவற்றின் மூலம் கொரோனா பரவல் காரணமாக நாட்டின் பொருளாரத்தில் ஏற்பட்ட தாக்கம் ஓரளவுக்குக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனூடாக 2021 ஆம் ஆண்டில் அடையக்கூடிய சுமார் 5 வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமானது, நீண்டகால அடிப்படையில் நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார மீட்சியொன்றுக்கு வழி வகுக்கும்.

வர்த்தகப் பற்றாக்குறை நிலைமையைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் மேலும் விரிவடைந்திருந்தது. அதுமாத்திரமன்றி கொரோனா பரவலால் ஏற்பட்டுள்ள சவால்கள் சுற்றுலாத்துறையின் மீட்சியில் தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்தியுள்ளன- என்றுள்ளது. (ஒ.4)

*35 வருடங்களின் பின்*

# பிரான்ஸ் விமானம் மீண்டும் இலங்கைக்கு

கொழும்பு,ஜூலை 12

பிரான்ஸின் தேசிய விமான சேவையான எயார் பிரான்ஸ், மீண்டும் இலங்கைக்கான நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையில் ஐந்தாவது பெரிய சுற்றுலா மூல சந்தையாக பிரான்ஸ் திகழ்கின்றது. அதற்கமைய, 1980 ஆம் ஆண்டு முதல் முறையாக கொழும்புக்கு அதன் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் நிறுத்தப்பட்டன.

சுமார் 35 வருடங்களின் பின்னர் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையம் வரை தமது சேவை விஸ்தரிக்கப்படும் என்று எயார் பிரான்ஸ் அறி வித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும். வாரத்துக்கு மூன்று முறை கொழும்பு வரை சேவைகள் இடம்பெறும்.

இந்த விமான சேவைகள் ஆரம்பிப்பதன் மூலம் பயண மற்றும் சுற்றுலா பயணிகளை வரவேற்கும் அதேவேளை, இலங்கைக்கும் மிகப்பெரும் நன்மைகள் கிடைக்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# 39 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஜூலை 10 ஆம் திகதிவரை 39 லட்சத்து 7 ஆயிரத்து 253 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

நேற்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ராஜெனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கொவிஷீல்ட், சீனாவின் தயாரிப்பான சைனோஃபோம், ரஷ்ய தயாரிப்பான ஸ்புட்னிக், பைஸர் ஆகிய தடுப்பூசிகள் இலங்கையில் மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸை பெற்றுக்கொண்டவர்களில் 3 லட்சத்து 85 ஆயிரத்து 647 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூலை 10 ஆம் திகதிவரை 28 லட்சத்து 56 ஆயிரத்து 147 பேருக்கு சைனோஃபோம்தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 10 லட்சத்து 23 ஆயிரத்து 128 பேர் பெற்றுள்ளனர்.

ஸ்புட்னிக் தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு அந்த தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 363 பேர் இரண்டாம் டோஸை பெற்றுள்ளனர்.

பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி ஜூலை 7 ஆம் திகதி ஆரம்பமானது. அதன் முதலாவது டோஸை இதுவரை 11 ஆயிரத்து 69 பேர் பெற்றுள்ளனர். (த-44)

# கோதுமை மா உணவுகளுக்கு பதிலாக மாற்று உற்பத்திகள்



கோதுமை மா தயாரிப்பான உணவுப் பொருள்களின் விலை எதிர்வரும் வாரங்களில் அதிகரிக்கப்படவுள்ளதால், அவற்றுக்குப் பதிலாக மாற்று உற்பத்திகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் பட்சத்தில் அதற்கான மாற்று வழிகளை அரசு மேற்கொள்ளும்.

அதனடிப்படையில் முதற்கட்டமாக அதிகுறைந்த விலையில் நூடில்ஸ் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவற்றை சந்தைக்கு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் பாகிஸ்தான் தூதரகச் செயலர் சந்திப்பு



அம்பாறை, ஜூலை 12

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும், பாகிஸ்தான் தூதரகத்தின் அரசியல், கல்வி, கலாசார செயலாளர் ஆயிஷா அபூபக்கர் பஹாத்தினுக்கும் இடையில் சிநேகபூர்வ சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்பப் பேரவையின் தவிசாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான கலாநிதி அன்வர் முஸ்தபாவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காரைதீவு மற்றும் அக்கரைப்பற்றில் இந்தச சந்திப்பு நடைபெற்றது.

தேசிய காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட அக்கரைப்பற்று பிரதேச சபை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட காரைதீவு பிரதேச மக்களின் குறைகள், தேவைகள், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, சமூக ஒற்றுமையின் தேவைப்பாடுகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது. இதன்போது பாகிஸ்தானில் வாழும் இந்து மக்களுக்கும் ஏனைய முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்குமிடையே உள்ள நட்பு, சகோதரத்துவம் தொடர்பில் விளக்கமளித்த ஆயிஷா அபூபக்கர் பஹாத் பாகிஸ்தானுக்கு வருமாறு தவிசாளர்கள் அடங்கிய சபையினருக்கு அழைப்புவிடுத்தார் (ப)

# ஆசிரியர்கள் தடுப்பூசி பெற பிற இடங்களுக்கு செல்லவேண்டாம்

கொழும்பு, ஜூலை 12

பிற மாவட்டத்தில் அல்லது பிற மாகாணத்தில் ஆசிரிய கடமை புரிவோர், கொரோனா தடுப்பூசி பெறுவதற்காக அத்தகைய இடங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. தடுப்பூசிகள் கிடைத்தவுடன் தத்தம் பகுதிகளிலேயே தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறினார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஸிப்பு காய்ச்சும் இடத்தை முற்றுகையிடச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல்!

## சுழிபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

சுழிபுரத்தில் கசிப்புக் காய்ச்சும் இடமொன்றை முற்றுகையிடச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: சுழிபுரம் வறுத்தோலை பகுதியில் கசிப்பு உற்பத்தியும் வியாபாரமும் இடம்பெறுகின்றன என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று முற்றுகையிட்டபோது சந்தேகிக்கப்பட்ட வீட்டில் இருந்து வெளியே வந்த பெண்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் இளைஞனும் அந்த இடத்துக்கு வந்துள்ளார். அந்த இளைஞன்தான் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார் என்று தெரிவித்த பெண்கள் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். குறித்த பெண்களை பொலிஸார் கைதுசெய்ய முற்பட்டபோது அவர்களின் உறவினரான ஆணொருவர் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளார். இதையடுத்து அந்த ஆணும் இளைஞனைத் தாக்கிய பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்து 40 லீற்றர் கோடாவும் ஒரு லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-27)

# இலங்கைக்குள் கடத்த இருந்த 1,350 கிலோ மஞ்சள் பறிமுதல்

மன்னார், ஜூலை 12

தனுஸ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்கு சட்ட விரோதமாக கடத்தப்படவிருந்த 1,350 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் நேற்று மீட்கப்பட்டது. மீன்பிடித் துறைமுகம் அருகே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் பதிவு எண் இல்லாத படகொன்று நின்றுள்ளது.

அந்தப் படகை மெரைன் பொலிஸார் சோதனையிடச் சென்றபோது படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து தப்பிச் சென்றுள்ளனர். பின்னர் படகைச் சோதனையிட்ட போதே மேற்படி மஞ்சள் கட்டிகள் மீட்கப்பட்டன. (ம-56)





# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் விரைவில் தரமுயர்த்தப்பட வேண்டும்

## ஜனநாயக இளைஞர் அமைப்பு வலியுறுத்து

அம்பாறை, ஜூலை 12

கல்முனை தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச்செயலாளர் கோபாலபிள்ளை மிதுஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

1989ஆம் ஆண்டு அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.தேவநாயகத்தின் முயற்சியில் உருவாக்கப்பட்டது கல்முனை வடக்கு பிரதேச செயலகம். அப்போது இதனுடன் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட உப பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் தற்போது நிதி மற்றும் காணி அதிகாரங்களைக் கொண்ட பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் இன்னும் தரமுயர்த்தப்படாமல் நிதி மற்றும் காணி அதிகாரங்கள் அற்ற செயலகமாகக் காணப்படுகின்றது. 1993ஆம் ஆண்டில் இருந்து பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் தமிழ்த் தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது வெறும் முயற்சியாகவே இன்றுவரை காணப்படுகின்றது. 29 கிராம அலுவலர் பிரிவுகளைக்கொண்டுள்ள குறித்த பிரதேச செயலகம் 31ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக்கொண்டுள்ளது. சரியான நிலத்தொடர்பைக் கொண்டுள்ளது. ஆனாலும் இன்னும் தரமுயர்த்தப்படவில்லை. இதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது அங்குள்ள சகோதர முஸ்லிம் அரசியல்வாதிகளே. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கல்முனை புத்திஜீவிகள் மற்றும் மக்களால் உண்ணாவிரதப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து பல்வேறுபட்ட அரசியல்வாதிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் நிறைவேற்றப்படவில்லை கடந்த நல்லாட்சிக் காலத்தில் கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதோ வருகிறார் அதோ வருகிறார் என்றார்கள் ஒன்றும் நடக்கவில்லை. எனவே தற்போதைய அரசால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும் என நம்புவதாகவும் தரமுயர்த்தல் செயற்பாடு விரைவில் நடைபெற வேண்டும் என்றார். (ப-13)

# வாள்வெட்டுக் கும்பலை ஆதரிக்கிறதா பொலிஸ்

## பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 12

வீட்டுக்குள் புகுந்து வாள் வெட்டில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை அடையாளப்படுத்தியபோதும், இதுவரை பொலிஸார் அவர்களைக் கைது செய்யவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை முகமாலை பகுதியில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வீட்டுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் வீட்டின் குடும்பத்தலைவரை வெட்டியதுடன், அங்கு காணப்பட்ட பொருள்களையும் அடித்து நொருக்கியது. இது தொடர்பாக தன்னை வெட்டியவர்களை காயமடைந்த நபர் அடையாளப்படுத்தினார். எனினும் இதுவரை அவர்கள் கைது செய்யப்படவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மேலும் தெரிவிக்கையில்;

வீட்டுக்குள் புகுந்து வெட்டியவர்கள் என அடையாளப்படுத்தியவர்களின் உறவினர்கள் சிலர் எமது வீட்டுக்கு வந்து சமாதானமாகச் செல்வோம் என தொந்தரவு செய்து வருகின்றனர். இது தொடர்பாக நாம் பொலிஸில் மீளவும் முறைப்பாடு செய்ய முற்பட்டோம். இருப்பினும் இதுவரை பொலிஸார் அடையாளப்படுத்தியவர்களை கைது செய்யாத காரணத்தால் நாம் பொலிஸில் மீளவும் முறைப்பாடு செய்யவில்லை என்றனர். இது தொடர்பாக [illegible] பொலிஸ் நிலையத்தில் வினவிய போது அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றனர். (ப-6)

**பணியாளர் தேவை**

நெல்லியடியில் அமைந்துள்ள வியாபார நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Ref) தேவை

076 822 7546/ 077 869 5341

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம் 30 . 01 . 1954

மறைவு 12 . 06 . 2021



**அமரர் ஜீவகாந்தன் யசோதாதேவி (ராணி)**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்.
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம்
காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

1010/7 கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

**15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 03 . 07 . 1940

உதிர்வு 28 . 06 . 2006



**அமரர் செல்லத்துரை செல்வநாயகம் (JPUM)**

உயர் நீதி மன்ற சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் (காரைநகர்)

திதி: 12.07.2021

அன்பின் ஊற்றாய்
ஆற்றலின் ஆசானாய்
இன்பத்தின் ஒளிவிளக்காய்
ஈந்துவக்கும் வள்ளலாய்
உள்ளத்தில் உயர்ந்தசீலனாய்
ஊரும் உறவும் போற்றும் உத்தமானய்
எல்லோரிடத்தும் இனியனாய், உயர்த்தும்
ஏணியாய் என்றும் இருந்து
ஐயமின்றி ஆண்டவன் மீது
ஒப்புயர்பெற்ற பக்தி கொண்டு
ஓம் என்ற பிரணவத்தை ஓதி
ஔவை நெறியில் அமைவுடன் வாழ்ந்து...

இன்று எமை ஆறாத்துயரில் ஆழ்த்திசென்று ஆண்டுகள் பதினைந்து ஆனாலும்... ஆறுமோ எம்துயர் என்றும் உங்கள் நினைவாகவே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

37/1, 2/1, ஹம்டன் லேன், மாருதி கோட், கொழும்பு- 6.

மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

இல 34/1 கலீமா வீதி யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 21 ம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் மொகிதீன் பாலா முகமது ஐசைன் தம்பி மகள் அகமதா என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு ரசீன் முகமட் இமாம் (Razeen Mohamed Imam) முகதாவில் 31/08/2019 ம் திகதிய 1787 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப் படுத்தல் உறுதி மூலம் முகம்மது அமீன் அகுமதா (Mohamed Ameen Agamatha) தானே இவ்வாதனத்தின் உரித்தாளர் என வெளிப்படுத்தி பிரதம நொத்தாரிசு ரசீன் முகம்மது முகதாவில் 17.10.2019 திகதியில் 1793 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் முகம்மது அமின் முகம்மது சபீர்க்கு நன்கொடை வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு தி.கணாதீபன் முகதாவில் வரையப்பட்ட 1811 இலக்க 22.10.2020 திகதிய அறுதி உறுதி மூலம் நீராவிப்பிட்டி மேற்கு முள்ளியவளையினை சேர்ந்த முகம்மது அமீன் ஆகுமதா மற்றும் 15C/15 மூர் வீதி, நிந்தனி, புத்தளத்தினைச் சேர்ந்த முகம்மது அமீன் முகம்மது சபீர் (மறுநாமம் முகம்மது அமீன் அலிசபீர்) ஆகியோர் 145 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தினை சேர்ந்த முகம்மது சுல்தான் முகம்மது ஜமால்தீன் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென் மேற்கு "பிராயடியும் புளியடியும்" நில.பர. 0 குளி 13.94 ம் கிணறும் கழிவறையும் செய்பயிர், வான்பயிர்களும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் J.H.R. பேரின்பநாயகம் அவர்களினால் 26.01.1979ம் திகதி 2526ம் இலக்கத்தில் வரையப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டது. இதன் எல்லை,

கிழக்கு : மயில்வாகனம் பெண் லட்சுமியம்மாவின் ஆதனம் ,
வடக்கு : அசானர் ஹமீடின் ஆதனம்.
மேற்கு : குறித்த 2526ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட ஆதனம்.
தெற்கு : குறித்த 2526ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 6 எனச்சுட்டப்பட்ட பொதுவான பாதை ஆதனமும் துண்டு 3 எனச்சுட்டப்பட்ட ஆதனமும்.

தற்போது முகம்மது சுல்தான் முகம்மது கமால்தீன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாத னத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின், பத்திரிகை பிர சுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முகம்மது சுல்தான் முகம்மது கமால்தீன் என்னும் பெயரிற்கு பெய்ர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்புாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

உள்ளே? வெளியே?

# கோத்தாபயவுடன் 21ல் சு.க. தீர்க்கமான சந்திப்பு

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் சுதந்திரக் கட்சியினருக்கும் இடையில் தீர்க் கமான சந்திப்பு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று அந்தக் கட்சி யின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரி வித்தார்.

அரசியல் பிரச்சினை உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந் துரையாட எதிர்ப்பார்த்திருப்பதாகவும், அந்தச் சந்திப்பின் பின்னர் முன்னோக்கிப் பயணிப்பதற்கான சூழ்நிலை உருவாகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அரசியலி லிருந்து வெளியேறுமாறும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறு வது முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படு கின்றது. மேற்படி சந்திப்பின் பின்னரே சுதந்திரக் கட்சியினரின் அடுத்தகட்ட அரசி யல் நகர்வுகள் தொடர்பிலான தீர்மானங் கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-22)

## கேள்வி அறிவித்தல்

**சபை நிதி மற்றும் பிரதேசசபை வலுவூட்டல் வேலைத்திட்டம் (மீள்வரும்) - 2021**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்**

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பின்பற் றப்படும். அத்துடன் 03/2020 ஆம் இலக்க 09.10.2020 ஆந் திகதிய, 03/2020 (i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் ஏற் பாடுகளும் பின்பற்றப்படும்.
03. இல 01-09 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள் விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மான தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் குறிப் பிடப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவல கத்தில் (தொலை பேசி 021 225 5381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எனும் இடத்திலிருந்து 12.07.2021ம் திகதி யிலிருந்து 26.07.2021ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2.000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத் தப்படல் வேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 27.07.2021 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவல கத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிரா கரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
09. கோரப்பட்ட வேலைகள் இல 01-09 வரையான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) (12.10.2021) நாட்களாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையும், கோரப்படும் காலமும் கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

### சபை நிதி வேலைத்திட்டம்

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை ரூபாயில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | கோரப்படும் செல்லுபடிக் காலம் |
| 1 | மூத்ததம்பி வீதி இணைப்பு வீதி புனரமைப்பு, மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2021/21 | 2.13 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 21,300.00 | 09.11.2021 |
| 2 | பொன்னம்பலம் வீதி புனரமைப்பு, மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2021/22 | 2.15 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 21,500.00 | 09.11.2021 |
| 3 | மாகியப்பிட்டி சந்தை இணைப்பு வீதி புனரமைப்பு NP/14/41(16)/W/CF/2021/23 | 2.06 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 20,700.00 | 09.11.2021 |
| 4 | i)ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை வீதி (இராசமுருங்கு வீதி) புனரமைப்பு ii)அன்னை சாரதா வீதி புனரமைப்பு, பிரான்பற்று NP/14/41(16)/W/CF/2021/24 | 2.74 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 27,500.00 | 09.11.2021 |
| 5 | i) சாவற்கட்டு 5 வீட்டுத்திட்ட வீதி புனரமைப்பு ii) யாவில் வீதி புனரமைப்பு, உயரப்புலம் iii) திருவள்ளுவர் சனசமூக முன் வீதி புனரமைப்பு, மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2021/25 | 2.72 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 27,300.00 | 09.11.2021 |
| 6 | i) சண்டிலிப்பாய் கம்மாலை 2ம் ஒழுங்கை புனரமைப்பு ii) தோலோடை வீதி புனரமைப்பு, பெரியவிளான் iii)நாவலர் வீதி,புக்கைபுலோ வீதி புனரமைப்பு, மாதகல் (மேலதிக வேலை) NP/14/41(16)/W/CF/2021/26 | 2.56 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 25,700.00 | 09.11.2021 |
| 7 | காக்கை தீவு மீன்சந்தை மற்றும் ஏல விற்பனை நிலையம் அமைத்தல் NP/14/41(16)/W/CF/2021/28 | 9.56 | 90 நாட்கள் | C7 & C6 (கட்டடம்) | 95,700.00 | 09.11.2021 |
| 8 | மாதகல் உப அலுவலகம் மற்றும் நூலக கட்டிடம் அமைத்தல் மிகுதி வேலையும் எல்லைச்சுவர் அமைத்தலும் NP/14/41(16)/W/CF/2021/29 | 3.11 | 90 நாட்கள் | C8 & C7 (கட்டடம்) | 31,100.00 | 09.11.2021 |

### பிரதேசசபை வலுவூட்டல் வேலைத்திட்டம் (மீள்வரும்)

| தொ. இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை ரூபாயில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | கோரப்படும் செல்லுபடிக் காலம் |
| 9 | கல்லுண்டாய்வெளி திண்ம கழிவகற்றல் முகாமைத்துவ அலகிற்கான களஞ்சிய அறை அமைத்தல் NP/14/41(16)/W/Recurrent -1.5Mn/2021/11 | 1.78 | 60 நாட்கள் | C9 & C8 (கட்டடம்) | 17,800.00 | 09.11.2021 |

11. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 19.07.2021ம திகதியன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.


**அ.ஜெபநேசன்,**
**தலைவர்**
**பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**

**12.07.2021.**

# வைர விழா வாழ்த்து

**குருவாக அருட்பொழிவு ரோமாபுரியில் 12.07.1961**

**வைரவிழா 12.07.2021**




இன்று வைரவிழா காணும்

## அருட்பணி லூயிஸ் பொன்னையா

**அ.ம.தி அடிகள்**

குருமணியாம் அருட்பணி லூயிஸ் பொன்னையா அ.ம.தி. அடிகள் இன்று தனது குருத்துவத்தின் வைரவிழாவின் நிறைவுகண்டு உடல், உள ஆன்மீகம் வலுவாய் பெற்று இறைவனின் அருளாசி நிறைவாய் காணும் அடிகளாரை இதய அன்பால் வாழ்த்துகின்றோம். இறைவனின் அருட்கொடைக்காய் நன்றி கூறுகிறோம்.

**இல.819, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**வாழ்த்துவோர்:**
**உறவினர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேன்முறையீட்டுக்கு...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க. மகேசன் இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு இறுதிப்பட்டியல் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடப்படும். வீட்டுத் திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவு தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் சகல பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று 12ஆம் திகதி திங்கட்கிழமை வரை சகல பிரதேச செயலகங்களிலும் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்படும். வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு தொடர்பில் ஆட்சேபனை உள்ளவர்கள் எழுத்து மூலம் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

முறைப்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு பிரதேச செயலகத்தால் எழுத்து மூலம் காரணம் தெரிவிக்கப்பட்டு மாற்றங்கள் ஏதும் நிகழுமானால் அதனை சரிசெய்து 19ஆம் திகதி இறுதிப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும்.

அதன் பின்னரும் பயனாளிகள் தமக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாவட்ட செயலகத்துக்கு விவரங்களை அனுப்பி வைத்தால் கருத்தில் எடுக்கப்படும் -என்றார். (ம-27)

### 672 கிலோ...

ணுவத்தால் கைப்பற்றப்பட்டது.

வன்னி இராணுவ தலைமையகத்துக்கு கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைவாகத் தேடுதல் மேற்கொண்ட போதே மேற்படி மஞ்சள் மீட்கப்பட்டது. மஞ்சள் கொண்டுவர பயன்படுத்தப்பட்ட மூன்று படகுகள் மற்றும் அவற்றைக் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட டிமோ பட்டா லொறி என்பனவும் கைப்பற்றப்பட்டன. அவற்றுடன் சந்தேகநபர், மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-த)

### ராஜபக்சக்களுடன்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தற்போது பிரதான இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும்போது பிற தரப்பினருடன் மோதி நேரத்தை வீணடிப்பது பயனற்றதாகும். நடைமுறையில் நாடு எதிர்கொண்டுள்ள சவால்களில் இருந்து நாட்டு மக்களை மீட்க வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து அரசுடன் மோத வேண்டும். தேசிய பொருளாதாரம், ஜனநாயகம் ஆகியவை பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. இந்த நெருக்கடிகளிலிருந்து நாட்டையும் மக்களையும் நாம் காப்பாற்ற வேண்டும்' என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை அடிமட்டத்தில் இருந்து பலப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-22)

### பொலிஸ்...

கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பஸில் ராஜபக்ச நிதி அமைச்சராக பதவியேற்றுள்ள நிலையில் நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் பொருளாதார இலக்குகளை விரைவில் அடைவதை இலக்காகக்கொண்டே அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது சுதந்திரக்கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்தக் கட்சிக்கு மேலும் மூன்று அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன.

சுகாதாரம், கல்வி, தொழில் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளை துடிப்புடன் செயற்படக்கூடிய இளம் அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

### பிரதேச சபை....

சாவகச்சேரி பிரதேச சபை சார்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவாகியிருந்த இராமாவில் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் கஜேன் (வயது 28) என்பரே உயிரிழந்துள்ளார்.

வீட்டிற்கு அருகே உள்ள காணி ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவருடைய சடலம் காணப்பட்டுள்ளது. அவருடைய மரணம் கொலையா? தற்கொலையா என்ற கோணத்தில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26,9)

### கொரோனா...

சட்டங்களால் மீறப்படக் கூடாது இவ்வாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர். அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அப்பால் செல்லக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளன. குறித்த தடைகளைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்த நிலையிலேயே, கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகள் கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுட்டிக் காட்டியுள்ளார். (ம-22)

### அரசினது...

ளிக்க முடியாது. அரசின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இனி நாமும் போராட்டத்தில் ஈடுபடுவோம்' என்று எல்லே குணவங்ஸ தேரர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் பொதுமக்கள் முன்னெடுத்த போராட்டத்தைப் பாதுகாப்புத் தரப்பினரே அமைதியற்ற போராட்டமாக மாற்றியமைத்தார்கள் என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

பொதுமக்கள் மீது அரசு கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகள், ஜனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. நாட்டில் தற்போது ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகள் அரச அதிகாரத்துடன் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

அரசின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு அரசு முன்னெடுக்கும் அனைத்துச் செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசின் சர்வாதிகாரப்போக்குத் தொடர்ந்தால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் கூடப் பறிபோகும் நிலை ஏற்படும். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இனி நாமும் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

தேசிய வளங்களைப் பிற நாட்டவர்களுக்குத் தாரைவார்க்கும் முயற்சியை அரசு தற்போது முன்னெடுத்துள்ளது. கொழும்பு நகரில் உள்ள பெரும்பாலான காணிகளை பல்வேறு தரப்பினருக்கு விற்பனை செய்யவும், குத்தகை அடிப்படையில் வழங்கவும் இரகசியமான முறையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்' - என்றார். (ம-22)

### மீண்டும்....

நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் இந்த நியமனத்தை இன்று திங்கட்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளார் என்று அறிய முடிகிறது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சுமார் 10 மாதங்களின் பின்னர் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வை மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர, தாவூத் லெப்பை அப்துல் மனாப் ஆகிய இருவரும் நாளை திங்கட்கிழமை முதல் முன்னெடுப்பார்கள்.

இதேவேளை, 2018 மே 26ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-26)

### நீச்சல்...

கொட, துவே மோதர கங்கையில் நடந்துள்ளது. சம்பவத்தில் தாத்தா மற்றும் அவரின் பேரன்களான 6 வயதுடைய இரட்டைச் சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்படையின் சுழியோடிகளால் மூவரது சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-4)

### உ/த....

செய்யப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையும் நடத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும், அதிகமான மாணவர்கள் தமக்கான பாடவிதானங்கள் உரிய முறையில் நிறைவு செய்யப்படாததால் பரீட்சையைப் பிற்போடுமாறு கோரியுள்ளனர் என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், பரீட்சைகள் தொடர்பில் மேலும் ஆராய்ந்த பின்னர் பரீட்சைகள் இடம்பெறும் திகதிகள் அறிவிக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா நேற்று தெரிவித்துள்ளார். (ம-22)

### சித்தங்கேணியில்...

வதாவது:

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சித்தங்கேணி சிவன் ஆலய வளாகத்தில், அந்த ஆலய நிர்வாகத்தில் உள்ள ஒருவருக்கும் வேறு ஒருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்த வேறு ஒரு நபர் கோவிலின் நிர்வாகத்தில் உள்ள ஒருவரை வாளால் வெட்டியுள்ளார்.

அவரது வாள் கீழே விழுந்ததையடுத்து அந்த வாள் மீட்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வாள்வெட்டை மேற்கொண்டவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் எனவும் கோவில் தகராறு காரணமாகவே வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் தமது முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்தனர். (ம-27)

### 18 பெண்கள்...

ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 502ஆக உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்த 35 பேரில் 17 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 பெண்களும், 5 ஆண்களும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 13 பெண்களும், 12 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-22)

## 1,507 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் நேற்று 1,507 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 74 ஆயிரத்து 538ஆக அதிகரித்துள்ளது. நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 1,492 பேர் புத்தாண்டு கொத்தணியைச் சேர்ந்தவர்கள் எனவும், 15 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனவும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. தொற்றிலிருந்து குணமடைந்து 1,598பேர் நேற்று வீடுதிரும்பினர். இதற்கமைய கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 44 ஆயிரத்து 437ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 599ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸியின் கனவு பலித்தது

# கோபா அமெரிக்காவில் ஆர்ஜென்ரீனா சம்பியன்

**பிரேசிலியா, ஜூலை 12**

**கோபா அமெரிக்கத் தொடரின் இறுதியாட்டத்தில் பிரேசிலை வீழ்த்தி கிண்ணம் வென்றது ஆர்ஜென்ரீனா. ஆர்ஜென்ரீன அணித்தலைவர் மெஸ்ஸி கைப்பற்றும் முதலாவது சர்வதேச கிண்ணமாகவும், ஆர்ஜென்ரீனா அணி 28 ஆண்டுகளின் பின்னர் கைப்பற்றும் ஒரு சர்வதேசக் கிண்ணமாகவும் இந்தக் கிண்ணம் அமைந்தது.**





தென்னமரிக்க நாடுகளுக்கு இடையிலான கோபா அமெரிக்கத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. தென்னமரிக்கக் கண்டத்தின் இரு பலம் பொருந்திய அணிகளான பிரேசிலும், ஆர்ஜென்ரீனாவும் இந்த இறுதியாட்டத்தில் மோதின. ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணியின் வீரர் மரியா கோலைப் பதிவுசெய்து அந்த அணிக்கு முன்னிலை வழங்கினார். அதன் பின்னர் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் நெய்மர் இரு தடவைகள் பதிலடி கொடுப்பதற்காக மிக நெருக்கமாகச் சென்றார். எனினும் எதுவும் மெய்ப்பட வில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது ஆர்ஜென்ரீனா. (ம)



## மகுடங்களை அள்ளிய ஆர்ஜென்ரீனா வீரர்கள்!

பிரேசிலியா, ஜூலை 12

கோபா அமெரிக்காத் தொடரின் கிண்ணம் மட்டுமல்ல வீரர்களின் தனிப்பட்ட பெறுபேற்றுக்குரிய கிண்ணங்களையும் ஆர்ஜென்ரீன வீரர்களே வசப்படுத்தியுள்ளனர்.

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி தொடரின் சிறந்த வீரராகவும், அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராகவும் தெரிவானார்.

ஆர்ஜென்ரீனா அணியின் அனுபவ வீரர் மரியா இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். ஆர்ஜென்ரீனா அணியின் கோல் காப்பாளர் எமி மார்டினஸ் சிறந்த கோல் காப்பாளராகத் தெரிவானார். (ம)







## கதறியழுத நெய்மர் ஆறுதல்கூறிய மெஸ்ஸி

பிரேசிலியா, ஜூலை 12

**கோபா அமெரிக்க** கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தோல்வியடைந்ததை அடுத்து பிரேசில் அணியின் வீரர் நெய்மர் கதறியழுதார். இதையடுத்து மெஸ்ஸி அவரை ஆறுதல்படுத்தினார்.

ஆட்டம் முடிந்த பின்னர் ஆர்ஜென்ரீன வீரர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது நெய்மர் மெஸ்ஸியை வாழ்த்துவதற்காக வந்தார். மெஸ்ஸியும் நெய்மரும் நெருங்கிய நண்பர்கள். பார்சிலோனா கழகத்தில் நீண்டகாலமாக விளையாடியவர்கள். மெஸ்ஸியைப் பார்த்ததும் நெய்மர் கட்டியணைத்துக் கதறியழுதார். மெஸ்ஸி நீண்ட நேரம் அவரை **அணைத்தபடி ஆறுதல்படுத்தினார்.** (ம)



## மறக்க முடியாத ஜூலை 10

பிரேசிலியா, ஜூலை 12

மெஸ்ஸியின் கால்பந்தாட்ட வாழ்வில் ஜூலை 10 என்பது என்றும் மறக்க முடியாத நாளாகப் பதிவானது.

2016ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி கோபா அமெரிக்க இறுதியாட்டத்தில் கிண்ணத்தை இழந்த மெஸ்ஸி விரக்தியில் ஓய்வை அறிவித்தார். அதன் பின்னர் இந்த வருடம் அதே ஜூலை 10ஆம் திகதி எந்தக் கிண்ணம் கிடைக்கவில்லை என்று ஓய்வை அறிவித்தாரோ அந்தக் கிண்ணத்தை முத்தமிட்டுள்ளார். (ம)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி. 1ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.

(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)

தொடர்பு: 076 221 2037, 076 734 1023, 077 064 2661

**கல்வி நிறுவனத்திற்கு வீடு வாடகைக்கு தேவை**

தேவைப்படும் இடங்கள்

- கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
- A9 வீதி. சாவகச்சேரி
- கே.கே.எஸ். வீதி. தெல்லிப்பளை
- பிரதான வீதி. சங்கானை ஆகிய இடங்கள்

தொடர்பு: 077 337 4261

**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

# Unique Test Tips
# 40 hrs. with free 4mock exam
# Latest course Material (Book 15)

0777 24 07 07

Academic or General

IELTS Life Skills - A1

திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH

SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 15/7/2021 ZOOM Online

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் 021 222 4403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12. 07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.